சீனக்கவிஞர் குமோரோவின்

# தேவதைகள்

(கவிதைத் தொகுப்பு)



தமிழாக்கம்
முனைவர் கு. சிதம்பரம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

சீனக்கவிஞர் கு மோரோவின்

# தேவதைகள்

(கவிதைத் தொகுப்பு)

தமிழாக்கம்

முனைவர் கு. சிதம்பரம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113

# நூல்விவரக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | சீனக் கவிஞர் கு மோரோவின் தேவதைகள் |
| மொழிபெயர்ப்பாசிரியர் | : | முனைவர் கு. சிதம்பரம்<br>உதவிப் பேராசிரியர்<br>அயல்நாட்டுத் தமிழர் புலம்<br>உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் |
| வெளியீட்டாளரும் பதிப்பு உரிமையும் | : | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்<br>இரண்டாம் முதன்மை சாலை<br>மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்<br>தரமணி, சென்னை 600 113 |
| வெளியீட்டு எண் | : | 777 |
| தரவரிசை எண் (ISBN) | : | 978–81–925359–5–1 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு |
| பதிப்பு ஆண்டு | : | 2014 |
| பயன்படுத்திய தாள் மேப்லித்தோ | : | 18.6 கிகி டி.என்.பி.எல். வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : | 1/8 |
| எழுத்தின் அளவு | : | 10 புள்ளிகள் |
| பக்க எண்ணிக்கை | : | 152 |
| அச்சுப்படிகளின் எண்ணிக்கை | : | 1200 |
| விலை | : | 70/– (ரூபாய் எழுபது மட்டும்) |
| அச்சகம் | : | ஸ்ரீசரவணா அச்சகம்,<br>144, தம்புத் தெரு<br>சென்னை 600 001 |
| பொருள் | : | மொழிபெயர்ப்பு |

***முனைவர் கோ. விசயராகவன்* எம்.ஏ., எம்.ஃபில், பி.எட்., பிஎச்.டி.**
*இயக்குநர்*
*உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்*
*சென்னை 600 113*

## அணிந்துரை

உலகச் செம்மொழிகள் வரிசையில் சீனமொழியும் தமிழ் மொழியும் முக்கிய இடத்தினை வகிக்கின்றன. இதற்குக் காரணமாக அமைவது இம்மொழிகளில் தோன்றியுள்ள செவ்விலக்கியங் களாகும். இவ்விலக்கியங்களில் பொதிந்துள்ள கருத்துச் செறிவும், நாகரிகமும் பண்பாடும் பிற மொழிகள் பேசும் மக்களுக்கெல்லாம் முன்னோடியாகவும் வழிகாட்டும் விதமாகவும் அமைந்துள்ளன.

பிறநாட்டு சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்திடல் வேண்டும் என்பதற்கிணங்க அயல்நாடுகளுக்குச் சென்று பணியாற்றும் வாய்ப்பைப் பெற்ற தமிழ் அறிஞர்கள் இன்று பல பேர் அந்நாட்டு மக்களின் பண்பாட்டையும், நாகரிகத்தையும் புரிந்துகொண்டு அந்நாட்டு இலக்கியங்களை ஆழமாக வாசித்துத் தமது மொழியில் பெயர்க்க முற்படுகின்றனர். அவ்வகையில் முனைவர் கு. சிதம்பரம் அவர்கள் மிகவும் அரும்பாடுபட்டு இக்கவிதை நூலினை மொழிபெயர்த்துத் தந்துள்ளார்.

இக்கவிதைத் தொகுப்பில் முப்பத்து நான்கு கவிதைகள் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு கவிதையும் முத்துக்களை கோர்த்தாற்போல மிகவும் நேர்த்தியாகப் பெயர்க்கப்பட்டுள்ளது. இதில் முதல் கவிதையான ‘தேவதைகளின் அவதாரம்’ சூரியனை உருவகமாக வைத்து ஆட்சி மாற்றத்தை வலியுறுத்துவதாகவும், சீனப் புரட்சியை வழிநடத்தும் விதத்திலும் அமைந்துள்ளது. ‘சாம்பல் பறவைகளின் இன்னிசை’ என்ற கவிதை இந்த உலகத்தில் நடந்தேறும் அக்கிரமங்களைப் படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. மேலும் சாம்பல் பறவைகளைப் பற்றிய பதிவு தமிழுக்குப் புதிய அறிமுகம் என்றே கூறலாம். ‘ஓ... பூமித் தாயே!, வீரமணம்’ ஆகியவை பாரதியின் குயில் பாடடை நினைவுபடுத்துவதாக இது உள்ளது. நம் சிந்தனையைத் தூண்டும் விதமாக அமைந்துள்ளன.

சீன இலக்கிய வரலாற்றில் தற்கால இலக்கியத்தில் ‘முதல் கவிதைத் தொகுப்பு’ என்ற இடத்தைப் பெற்ற இத்தொகுப்பினைத் தமிழுக்குத் தந்த முனைவர் கு. சிதம்பரம் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்** தமிழ் மீதும், தமிழர் மீதும், தமிழ்ப் பண்பாட்டின் மீதும் கொண்டுள்ள அன்பும் கருணையும் அளப்பரியன. தமிழின் மேம்பாட்டுக்கெனப் பல திட்டங்களை மேற்கொண்டு செயலாற்றி வருகின்றார்கள். ஒல்லும் வகையெல்லாம் தமிழ் வளர்த்துவரும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களுக்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் நன்றிகளைப் பதிவுசெய்கின்றேன்.

தமிழ் வளர்ச்சிக்கும் இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவருமாகிய மாண்புமிகு **திரு. கே.சி. வீரமணி** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சியில் எங்களை வழிநடத்திவரும் **தமிழ் வளர்ச்சி, மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் முனைவர் மூ. இராசாராம் இ.ஆ.ப.** அவர்களுக்கும் என் இனிய நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கிறேன். இந்நூலை மெய்ப்புத் திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும், இதைக் கணியச்சில் ஒழுங்கு செய்த திருமதி எ.ம.இலட்சுமிக்கும், இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த ஸ்ரீசரவணா பிரிண்டர்சுக்கும் என் பாராட்டுகள்.

**இயக்குநர்**

# என்னுரை

நான் 2006 முதல் 2008 வரையிலான காலக்கட்டத்தில் சீனாவில் சங்சூன் மாநிலத்தில் ரேபில்ஸ் பன்னாட்டுக் கல்லூரியில் மொழியியல் விரிவுரையாளராகப் பணியாற்றியபோது சீன இலக்கியங்களின் ஆங்கில மொழிபெயர்ப்புகளைத் தேடித்தேடி வாங்கிப் படிக்க ஆரம்பித்தேன்.

சீனச் செவ்விலக்கியங்கள், இக்கால இலக்கியங்கள், வரலாற்றுப் புதினங்கள், நாட்டுப்புற கவிதைகள், டிராகான் கதைகள், அறிவுரைக் கதைகள் ஆகியவை என்னை மிகவும் ஈர்த்தன. குறிப்பாக லூ சுன், கு மோரோ ஆகியோரின் படைப்புகள் என்னைத் தமிழில் மொழிபெயர்க்கத் தூண்டும் விதமாக அமைந்தன.

சீனாவில் நான் இருந்த காலத்தில் லூ சுன் படைப்புகளை மொழிபெயர்க்கும் ஆவலோடு அவரது சிறுகதைகளை ஊன்றி வாசித்து வந்தேன். ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட அவரது புகழ்பெற்ற சிறுகதையான The Madman's Dairy எனும் கதையைத் தமிழில் 'ஒரு மனநோயாளியின் நாட்குறிப்பு' எனும் தலைப்பில் மொழிபெயர்க்கத் தொடங்கினேன்.

இச்சிறுகதையை மொழிபெயர்ப்பதற்காகத் தினமும் தூங்கப் போகும் முன் சுமார் இரண்டு மணி நேரம் மடிக்கணினியின் முன் அமர்ந்து புத்தகத்தைப் பார்த்துப் படித்தவாறே ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்து ஒளியச்சுச் செய்தேன். இச்சிறுகதையை மொழி பெயர்த்து முடிக்க மூன்று மாதங்கள் ஆகிவிட்டன. இம்மொழி பெயர்ப்பினை மின்னஞ்சல் மூலம் புதுவிசை காலாண்டிதழுக்கு அனுப்பி வைத்தேன். புதுவிசை காலாண்டிதழ் அதனை வெளியிட்டு என்னை ஊக்கப்படுத்தியது.

2008ஆம் ஆண்டின் இறுதியில் எனது இரண்டாண்டு ஒப்பந்தக் காலத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பினேன். அதன்பிறகு இரண்டு ஆண்டுகள் மைசூரிலுள்ள இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தில் பணியாற்றினேன். அக்காலக்கட்டத்தில் இலக்கியத் தின் மீதுள்ள ஆர்வம் என்னுள்ளில் சற்றுக் குறைந்துபோய் இருந்தது. பிறகு 2010ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் எனக்குப் பணி ஆணையை வழங்கி எனக்கு வாழ்க்கை யைக் கொடுத்தது. என்னுள்ளில் குறைந்து போயிருந்த இலக்கிய

ஆர்வம் மீண்டும் துளிர்க்க ஆரம்பித்தது. சீனாவிலிருந்து வாங்கிவந்த அரிய பொக்கிசங்களான சீன இலக்கிய நூல்களைத் தூசு தட்டி எடுத்து மீண்டும் வாசிக்கத் தொடங்கினேன். அப்பொக்கிசங்களில் ஒன்றான கு மோரோவின் நூ வென் (The Goddesses) கவிதைத் தொகுப்பைத் தேர்ந்தெடுத்து நிறுவனத்தின் திட்டப்பணியாக எடுத்து 2011ஆம் ஆண்டு முதல் தமிழில் மொழியாக்கம் செய்யத் தொடங்கினேன். இக்கவிதைத் தொகுப்பினை சீன மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு ஜாங் லெஸ்டர் (Jong Lester) மற்றும் பேர்னிஸ் (A.C. Barnes) ஆகியோரால் பெயர்க்கப்பட்டுள்ளது.

அத்தொகுப்பிலுள்ள இரண்டு கவிதைகளை எனது இரண்டாவது முயற்சியாக மொழிபெயர்த்துப் புதுவிசை இதழுக்கு அனுப்பி வைத்தேன். அவ்விரு கவிதைகளும் புதுவிசையில் வெளிப்பட்டமை எனது ஆர்வத்தை மேலும் மேலும் தூண்டும் விதமாக அமைந்தது. அடுத்தடுத்துத் தேவதைகளின் அவதாரம், சாம்பல் பறவைகளின் இன்னிசை ஆகிய நெடுங்கவிதைகளும் வெளிவந்தன. அக்கவிதை களுக்குப் பாராட்டுதலும் வெகுவாக எனக்கு கிடைத்தன என்பது குறிப்பிடத்தக்கது.என்னை ஊக்குவித்த புதுவிசை காலாண்டி தழுக்கும் அதன் ஆசிரியருக்கும் அதன் வாசகர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எனது மொழிபெயர்ப்புப் பணியினை வேகப்படுத்தி இம்மொழி பெயர்ப்பு நூல் எவ்வாறு அமைய வேண்டும் என்று வழிகாட்டிய நிறுவன இயக்குநர் பேரா. முனைவர் கோ. விசயராகவன் அவர் களுக்கும், எனது மொழிபெயர்ப்புக் கவிதைகளை ஒவ்வொன்றாக இரசித்து இரசித்துப் படித்து அவற்றிற்குப் பாராட்டுச் சான்றிதழை வழங்கிய எனது மனைவி சுகன்யா அவர்களுக்கும், அக்கவிதை களைப் பொறுமையாகப் படிக்க எனது மனைவிக்கு அனுமதி அளித்த எனது இரண்டு வயது மகன் ஆதவப்பிரியனுக்கும் எனது அன்பான நன்றியைத் தெரிவிப்பது எனது பண்பென்று எண்ணுகின்றேன்.

எனது மொழிபெயர்ப்பினை அவ்வப்போது படித்து என்னை ஊக்குவித்த நிறுவனப் பேராசிரியர்களுக்கும், இக்கவிதைத் தொகுப்பினை ஆவலோடு மெய்ப்புத் திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும், ஒளியச்சுச் செய்து கொடுத்த திருமதி. எ.ம. லட்சுமி அவர்களுக்கும், இதனை அழகுற அச்சிட்டுத் தந்த ஸ்ரீசரவணா அச்சகத்தாருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கு. சிதம்பரம்**

# கு மோரோ



கு மோரோ (Guo Moruo) 1892ஆம் ஆண்டு சீனாவின் சிச்சுவான் மாநிலத்தில் பிறந்தவர். சப்பான் நாட்டில் பள்ளிக் கல்வியையும், மருத்துவக் கல்வியையும் பயின்றவர். அங்குக் கல்வி பயின்ற காலக்கட்டத்தில் இரவிந்தரநாத் தாகூர், கதே, ஹெய்ன், வால்ட்விட்மன் ஆகிய உலகப் புகழ்பெற்ற இலக்கியவாதிகளின் படைப்புகள் அவரது உள்ளத்தைக் கவர்ந்தன; சிந்தனையைப் பக்குவப்படுத்தின.

நாட்டுப்பற்றுப் பற்றிய தனது எண்ணக் கருத்துகளை வெளிப் படுத்தும் விதமாகத் தனது முதல் சிறுகதையினை 1919இல் வெளியிட்டார். 1921இல் நூ வென் (தேவதைகள்) எனும் தலைப்பில் வெளிவந்த இக்கவிதைத் தொகுப்பு சீனாவின் தற்கால இலக்கிய வரலாற்றில் முதல் கவிதைத் தொகுப்பு என்ற வரிசையில் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. அதனைத் தொடர்ந்து நட்சத்திர வானம், காவலன் ஆகிய இவரது கவிதைத் தொகுப்புகளும் வெளி வந்தன.

நீ யிங், சு யுவான் ஆகிய வரலாற்று நாடகங்களையும், சமூக அமைப்பும் சமூக புரட்சியும் எனும் நூலையும் எனது குழந்தைப் பருவம் எனும் தலைப்பில் தனது சுயசரிதை நூலையும் எழுதியவர். இவரது படைப்புகள் பல்வேறு உலக மொழிகளில் மொழியாக்கம் செய்யப் பட்டுள்ளன.

காலாண்டிதழ், வார இதழ், நாளேடு ஆகியவற்றைத் தொடங்கி அவற்றில் தொடர்ந்து இலக்கியப் படைப்புகளை வெளியிட்டவர். குவாங்சோ மாநிலத்தில் குவாங்துங் பல்கலைக்கழகத்தில் கலைப் புலத்தின் தலைவராகவும் விளங்கியவர். சீன நாட்டுக்கும், மக்களுக்கும் தலையாய சேவை புரிந்தவர். சோசலிசத்திற்கும் அவரது பங்கு மகத்தானது. இப்புகழ் பெற்ற எழுச்சிக் கவிஞர் 1978ஆம் ஆண்டு ஜூன் 12ஆம் நாள் இயற்கை எய்தினார். இம்மாபெரும் கவிஞரின் வாழ்க்கையை நினைவு கூறும் வகையில் பெய்ஜிங்கில் உள்ள புகழ்பெற்ற பூங்கா ஒன்றில் சிலையெழுப்பி சீன அரசாங்கம் அவரைக் கௌரவப்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஆசிரியர் குறிப்பு



முனைவர் கு. சிதம்பரம் அவர்கள் மொழியியலில் முதுகலை மற்றும் முனைவர் பட்டங்களைக் கோயம்புத்தூரில் அமைந்துள்ள பாரதியார் பல்கலைக்கழகத்தில் பெற்றவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதுகலைத் தமிழையும், புதுதில்லியிலுள்ள இந்தியத் தேசிய மனித உரிமைகள் கழகத்தில் முதுகலை மனிதஉரிமைகள் பட்டயத்தினையும் பெற்றவர். கல்லூரி மற்றும் பள்ளிக் கல்வியினைத் தருமபுரி மாவட்டத்தில் தமிழ் வழியில் ப்யின்றவர்.

செப்டம்பர்த் திங்கள் 7, 2010 முதல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின், அயல்நாட்டுத் தமிழர் புலத்தில் உதவிப் பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார். மேலும்,உலகத் தமிழர் பண்பாட்டு வரவேற்பு (ம) தகவல் மையத்தின் பொறுப்பாளராகவும் செயல்பட்டு வருகின்றார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனப் பணியினை ஏற்பதற்கு முன்பாகச் சீனாவில் சங்சுன் மாநிலத்திலுள்ள ரேபில்ஸ் பன்னாட்டுக் கல்லூரியில் இரண்டு ஆண்டுகள் மொழியியல் விரிவுரையாளராகவும், மைசூரிலுள்ள இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் இந்தியத் தேசியத் தேர்வுப்பணி மையத்தில் ஒராண்டும் தென்னிந்திய மொழிகளின் மையத்தில் ஓராண்டும் தமிழ் விரிவுரையாளராகக் கடமையாற்றியவர். பாரதியார் பல்கலைக் கழகத்தின் மொழியியல் துறையில் பல்கலைக் கழக மானியக்குழுவின் ஆராய்ச்சித் திட்டத்தில் திட்ட உதவியாளராகவும் கடமையாற்றியவர்.

இவர் அயல்நாடுகளில் தமிழை வளர்க்கவும் தமிழைப் பரப்பவும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் அயல்நாட்டுத் தமிழர் புலம் வாயிலாகப் பல்வேறு பணிகளைத் திறம்படச் செய்து வருகின்றார். இவர் இங்கிலாந்து, மலேசியா, சிங்கப்பூர், சீனா ஆகிய நாடுகளுக்கு ஆராய்ச்சிப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

2013 ஆகஸ்ட் திங்களில் இலண்டன் உலகத் தமிழியல் ஆய்வு நடுவம் இலண்டன் பலகலைக்கழகத்தில் நடத்திய உலகத் தமிழியல் ஆய்வு மாநாட்டின் துணைத் தலைவராகவும், 2014 ஆம்

ஆண்டு மே திங்களில் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியக் களமும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் இணைந்து சிங்கப்பூரில் நடத்திய **புலம்பெயர்ந்த தமிழர் வரலாறும் வாழ்வியலும்** எனும் பன்னாட்டுக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகவும் இருந்து செயல்பட்டவர். தமிழ்நாடு அரசு நிதிநல்கையுடன் **அயல்நாட்டுத் தமிழ் இலக்கியங்கள்** எனும் பொருண்மையில் இரண்டு நாள்கள் தேசியக் கருத்தரங்கினையும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதி நல்கையுடன் **தொடரியல் கோட்பாடுகளின் வளர்ச்சி-தொல்காப்பியத்தை முன்வைத்து** எனும் பொருண்மையில் மூன்று நாள்கள் தேசியக் கருத்தரங்கினையும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நடத்தியவர்.

இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தகைசார் வாழ்நாள் பேராசிரியர் முனைவர் அ. சண்முகதாஸ் அவர்களுடன் இணைந்து **உலகத் தமிழியல் ஆய்வுகள்** *(தொகுதிகள் 1&2)*, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் பேரா. முனைவர் கோ.விசயராகவன் அவர்களுடன் இணைந்து **அயல்நாட்டுத் தமிழ் இலக்கியங்கள்** *(தொகுதிகள் 1&2)*, **புலம்பெயர்ந்தோர் இலக்கியங்களில் செவ்வியல் இலக்கியங்களின் தாக்கம், புலம்பெயர்ந்த தமிழர் வரலாறும் வாழ்வியலும்** ஆகிய நூல்களையும் பதிப்பித்துள்ளார். இவைதவிர தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட மாணவர்கள் இரண்டாம் மொழி ஆங்கிலம் கற்றல் கற்பித்தலில் உள்ள இடர்ப்பாடுகள் எனும் இணைய ஆங்கில நூலினையும் இருபதுக்கும் மேற்பட்ட ஆங்கிலக் கட்டுரைகளையும் தமிழ் ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

மேலும்,சீன எழுத்தாளர் லு சுன் அவர்களின் உலகப் புகழ்பெற்ற சிறுகதையினைத் **(மனநோயாளியின் நாட்குறிப்பு)** தமிழாக்கம் செய்துள்ளார். செவ்வாய்தோசம் பிடித்த சுதந்திரதேவி, ஆனந்த கண்ணீர், அன்று பள்ளி விடுமுறை ஆகிய சிறுகதைகளையும் எழுதியுள்ளார். வார்ப்பு, முத்துக்கமலம், கீற்று ஆகிய இணையத்தளங்கள் மூலம் கவிஞராகவும் அறிமுகமாகியுள்ளார்.

தற்போது தாய்மொழித் தமிழல்லாதோருக்கான ஆங்கிலம் - தமிழ் இருமொழி அகராதியினைப் பல்கலைக்கழக மானியக் குழுவின் திட்டப் பணியாகச் செய்துவருகின்றார். மேலும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் திட்டப்பணியாக உலக அளவில் செயல்பட்டு வரும் தமிழ்ச் சங்கங்கள்/அமைப்புகள் குறித்த தகவல் களஞ்சியத்தினைத் தயாரித்து வருகின்றார். தேன் கூட்டில் ஒரு தேனீயின் பங்களிப்புப்போலத் தாய்த்தமிழுக்கு இவரது பங்களிப்பு சுவையினை அளிப்பதாக உள்ளது.

# பொருளடக்கம்


| | |
|---|---|
| **Rebirth of the Goddesses** | 12 |
| தேவதைகளின் அவதாரம் | 13 |
| **The Nirvana of the Feng and Huang** | 31 |
| சாம்பல் பறவைகளின் இன்னிசை | 32 |
| **Coal in the Grate - Dedicated to my native land** | 53 |
| உலையிலிருக்கும் நிலக்கரி– அர்ப்பணிப்பு என் தாய்நாட்டிற்கு | 54 |
| **Sunrise** | 55 |
| சூரியோதயம் | 56 |
| **The Good Morning** | 57 |
| காலை வணக்கம் | 58 |
| **Panorama from Fudetate Yama** | 60 |
| பூடெட்யாமா மலையிலிருந்து ஒரு காட்சி | 61 |
| **Shouting on the Rim of the World** | 62 |
| உலகத்தின் விளிம்பில் | 63 |
| **Three Pantheists** | 64 |
| மூன்று ஆத்திகவாதிகள் | 65 |
| **By Electric Light** | 66 |
| மின்சார வெளிச்சத்தில் | 67 |
| **O Earth, My Mother** | 72 |
| ஓ பூமித் தாயே...! | 73 |
| **Morning Snow** | 82 |
| விடியற்காலையின் வெண்பனி | 83 |
| **Sea of Light** | 84 |
| வைரக்கல் | 85 |
| **Drunken Song Under a Flowering Plum Tree** | 90 |
| பூத்துக்குலுங்கும் பிளம் மரத்திணடியில் குடிகாரனின் பாடல் | 91 |
| **Pacing Through Jurimatsubara at Night** | 92 |
| இரவில் சுரிமத்சுபரா | 93 |
| **I am an idolater** | 94 |
| நான் ஓர் உருவ வழிபாட்டாளன் | 95 |
| **Hymn to the sun** | 96 |
| சூரிய துதி | 97 |

**Footprints in the Sand** 100
மணற்பரப்பில் பதித்த கால்சுவடுகள் 101

**Pyramids** 102
பிரமிடுகள் 103

**Victorious in Death** 106
வீரமரணம் 107

**Venus** 114
தேவதை 115

**Parting** 116
பிரிவு 117

**Spring Sadness** 120
வசந்தகாலத் துயரம் 121

**New Moon and White Clouds** 122
பிறை நிலவும் வெண்மேகக் கூட்டங்களும் 123

**Egret** 124
கொக்கு 125

**Spring Silkworms** 126
வசந்த கால பட்டுப்புழுக்கள் 127

**Night Song of a Misanthropist** 128
அவநம்பிக்கைக் கொண்டவனின் இரவு காணா 129

**Moonlight After Rain** 130
மழைக்குப் பிறகு நிலவொளி 131

**Bright Morning** 132
மகிழ்ச்சியான காலைபொழுது 133

**On the Shore** 134
கடற்கரையில் 135

**Stirrings of Morning** 140
விடியற்காலை 141

**Stirrings of Spring** 142
வசந்த காலத்தின் தொடக்கம் 143

**Wedding at Sundown** 146
சூரிய அஸ்தமனத்தில் நடந்த திருமணம் 147

**Sunrise Seen from a Boat** 148
படகிலிருந்து பார்த்த சூரிய உதயம் 149

**Estuary of the Whamoa** 150
கிராமத்து நதி 151

# Rebirth of the Goddesses

***All things transitory***
***But as symbols are sent;***
***Earth's insufficiency***
***Here grows to event;***
***The Indescribable,***
***Here it is done;***
***The Woman-soul leadeth us***
***Upward and on!*** Goethe: Faust

*A fissure in the Puchou Mountain; its walls rise abruptly. On either side tower up crags, formidable as the Yangtze Gorges, shaped by nature into the semblance of the gateway to a city. Beyond the crags a vast expanse of sea stretches away to merge with the sky. In front of the crags the level ground is carpeted with luxuriant emerald grass strewn with fallen fruit. Innumerable niches pierce the walls of the sentinel crags and in each niche stands the statue of a nude goddess bearing in her hands some form of stringed or wind instrument which she seems to be playing.*

*Strange trees grow profusely on the mountain-sides. Their leaves are like those of the date palm; the flowers are golden in colour, with calices like agate. The flowers are large as magnolias; the ripe fruits are shaped like peaches but somewhat larger. Over the summit of the mountain hang massy white clouds, hardly distinguishable against the sky.*

*The time is of the remote past, a day during the struggles for kingship of Kung-kung and Chuan-hsu. It is dark.*

*When the curtain rises, all is silent and the silence persists for some moments when distant sounds of clamour make themselves heard.*

*The goddesses lay aside their instruments and slowly step down from their niches. Slowly they look round them.*

# தேவதைகளின் அவதாரம்

*அனைத்துப் பொருட்களும் மாற்றமடையக் கூடியவை*
*அவதாரங்கள் தோன்றும்போது;*
*பல அரிய வரையறுக்கமுடியாத அற்புதங்கள்*
*பூமியில் நடந்தேறுகின்றன – புரட்சி*
*விடியலை நோக்கி நம்மை வழிநடத்துகிறது.* – கதே : பாஸ்ட்

புசுவோ மலை இரண்டாக வெடிக்கிறது: வெடிப்பின் இருமருங்கிலும் இராட்சசப் பாறைகள் சுவர்போல் வானத்தை நோக்கி வளர்கின்றன. இது மலையை இரண்டாகப் பிளந்துகொண்டு ஓடும் யங்சி நதியின் இருமருங்கிலும் உள்ள பாறைகளைப்போல் வலிமையுடையதாகவும் சொர்க்கபுரியின் நுழைவு வாயில் போலவும் இயற்கை எழிலோடு தோற்றமளிக்கிறது. இராட்சதப் பாறைகளின் முகடுகளையும் தாண்டிக் கடல் மேல்நோக்கி நீட்சியடைகிறது விண்ணோடு இணைவதற்கு. பாறையின் இருமருங்கிலும் மரகதக் கற்கள் பதிக்கப்பட்ட சிவப்புக் கம்பளம் விரிக்கப்பட்டு மலர்கள் தூவப்பட்டுள்ளன. சுவரின் இருமருங்கிலும் எண்ணற்ற விளக்கு மாடங்கள் ஜொலித்துக் கொண்டிருக்கின்றன. வீணையைத் தனது கைகளில் ஏந்தியவாறு நிர்வாணத் தேவதைகளின் பிம்பங்கள் ஒவ்வொரு விளக்கு மாடத்திலும் பிரதிபலிக்கின்றன.

மலையின் இருமருங்கிலும் அபூர்வ மரங்கள் அபரிமிதமாக வளருகின்றன. அவற்றின் இலைகள் ஈச்ச மர இலைகள்போல் உள்ளன. மலர்கள் அல்லி மலர் போன்று சற்றுப் பெரியதாக உள்ளன. அம்மலர்கள் தங்க நிறத்தில் மிளிருகின்றன. பழுத்த பழங்கள் பீச் பழத்தைவிடச் சற்றுப் பருத்துக் காணப்படுகின்றன. மலை முகட்டின் மேல் வெண் மேகக் கூட்டங்கள் முத்தமிட்டுக்கொண்டிருந்தன விண்ணை மறைத்துக்கொண்டு.

காலம் : பல நூற்றாண்டுகள் பின் நோக்கிக் கடந்து செல்லுகிறது. ஒரு நாள் சுவான்-அசு மற்றும் குங்-குங், ஆகிய இருவரும் நாட்டின் அரியணையை கைப்பற்றுவதற்காக போரிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இருள் கவ்வுகிறது.

திரை மேல் நோக்கி நகர்கிறது. சில நிமிடங்கள் தரணியெங்கும் ஒரே அமைதி. தூரத்திலிருந்து வரும் ஒலி காதுகளில் விழுகிறது.

தேவதைகள் விளக்கு மாடத்திலிருந்து மெதுவாக இறங்கி வந்து தங்களுடைய வீணைகளைக் கீழே வைத்துவிட்டுச் சுற்றுமுற்றும் பார்க்கின்றனர்.

**FIRST GODDESS:**

Since when the five-hued rocks were smelted
to fill the cracks in the heavens
darkness has been half driven away
beyond the bounds of the celestial sphere.
Within this fair world
strains of silent music have married in harmony.
How many moons have waxed and waned,
their light reflected on this wafted life-music?

**SECOND GODDESS:**

But why can we not bring into accord
the measures we play today?
I fear that in this universe
a catastrophe is likely to come upon us again.
Hark! This harsh clamour
ever louder, ever nearer:
is it from the waves in the sea,from wind in Space
or can it be the counterpoint of evil cries?

**THIRD GODDESS:**

Were they not the barbarous hordes
that passed by the foot of this very Puchou Mountain?
They go, they said, to fight for some paltry hegemony;
this turbulence has become intolerable.
Sister goddesses,what are we to do?
Our celestial canopy, built of five-coloured stone,
may well be shattered in fragments.
The weary sun merely sleeps in space,
no longer shedding its burning waves of light.

**முதல் தேவதை :**

சொர்க்கலோகத்தில் ஏற்பட்ட விரிசலை
ஐந்து ராட்சசப் பாறைகளை
உருக்கி அடைத்த பிறகும்
பாதி இருள்தான் விரட்டப்பட்டிருக்கிறது
அழகிய இச்சொர்க்கபுரியில் மௌன ராகங்கள்
ஒன்றோடொன்று உறவுகொண்டு மாங்கல்யம் சூடிக்கொண்டிருக்கின்றன
எத்தனை நிலவுகள் திரி ஏற்றப்பட்டுத் தீர்ந்துபோயிருக்கின்றன
அதன் ஒளி வாழ்க்கை என்ற
மௌன ராகத்தின் மீது பிரதிபலிக்கின்றதா?

**இரண்டாம் தேவதை :**

நம் வலிமையின் எல்லையை இன்று பரிசோதித்துப் பார்த்தாலென்ன?
இப்பிரபஞ்சத்தின் ஒரு பேரழிவு மீண்டும் நம்மை நோக்கி
வந்துகொண்டிருக்கிறது!
ஆ...! கொடூர சத்தம்
நம்மை நெருங்கிக் கொண்டிருக்கிறதே!
இது எங்கிருந்து வருகிறது?
கடல் அலைகளில் இருந்தா?
அண்டவெளியில் வீசும் காற்றிலிருந்தா?
இல்லை சாத்தானின் அழுகுரலா?

**மூன்றாம் தேவதை :**

புசுவோ மலையின் அடிவாரத்தைக்
கடந்து சென்று கொண்டிருக்கும்
காட்டுவாசிகளின் கூப்பாடாக இருக்கக்கூடாதாயென்ன?
சிம்மாசனத்திற்காக அற்பத்தனமாகப்
போரிடப் போவதாகப் பேசிகொள்கிறார்கள்
இங்கு நடந்தேறும் அமளியை
பொறுத்துக்கொள்ள முடியவில்லை
என்னருமை சகோதரிகளே!
இது குறித்து என்ன செய்வதாக உத்தேசம்?
நம் சொர்க்கபுரியின் மேல்விதானம்
ஐந்து நிறப் பாறைகளால் வேயப்பட்டுள்ளது
அது தூள்தூளாக உடைந்து
சிதறிவிடும் போல இருக்கிறதே!
சோம்பேறி சூரியன் சும்மா
கிடந்து உறங்குகிறது வானத்தில்
அதனுடைய ஒளிக் கற்றைகள்
வெளிச்சத்தை தருவது இல்லை.

**FIRST GODDESS:**

I will go forth and create new light,
no longer will I remain a mere goddess in a niche.

**SECOND GODDESS:**

I will go forth and create new warmth
to compound with your newly created light.

**THIRD GODDESS:**

Sister goddesses, new wine may not be contained in old
skins.
I will go forth and create a new sun
to contain your new light and new heat.

**CHORUS OF GODDESSES:**

We will create a new sun,
no longer will we remain mere statues in niches.

*The goddesses dissolve into the sea beyond the mountain gateway. Behind the mountain rises the clash of embatted emperors.*

**CHUAN-HSU:**

I received Heaven's mandate;
Heaven appointed me to rule the world!
Kung-kung, do not let yourselves be caught up
by the Spirit of Death;
let me establish my rightful place as leader.

**KUNG-KUNG:**

I know nothing about this rant of heaven and earth!
I follow my nature in my desire to be emperor.
If there is to be talk of the Spirit of Death, then
I'll deal out death for you.
Chuan—hsu,you had better look out for your
own skin!

**முதல் தேவதை :**

நான் புதிய ஒளியை உருவாக்கப் போகிறேன்
வெறும் தேவதையாக இனியும்
இம்மாடத்தில் என்னாலிருக்க முடியாது.

**இரண்டாம் தேவதை :**

நான் புதிய வெப்பத்தை உருவாக்கப் போகிறேன்
நீ உருவாக்கிய ஒளியுடன் இணைத்து.

**மூன்றாம் தேவதை :**

நான் புதிய சூரியனை உருவாக்கப் போகிறேன்
உங்கள் புதிய ஒளியையும்
புதிய வெப்பத்தையும் சேர்த்து.

**மூன்று தேவதைகளும் குழுவாக:**

நாம் புதிய சூரியனை உருவாக்குவோம்
வெறும் சிலைகளாக இம்மாடத்தில்
இனியும் இருக்கக்கூடாது.

***தேவதைகள் மலையின் நுழைவு வாயிலைத் தாண்டிக் கடலில் மறைந்து விடுகின்றன. மலை அடிவாரத்தில் இரண்டு மன்னர்களின் போர் முரசு ஒலிக்கிறது.***

**சுவான்–அசு :**

யான் சொர்க்கத்திலிருந்து சம்மதத்தைப் பெற்றுள்ளேன்.
இப்பூலோகத்தை ஆள்வதற்காகச் சொர்க்கத்தின் தேவதையால்
யான் நியமிக்கப்பட்டுள்ளேன்.
குங் குங் அவர்களே! சாவு மணியை உமக்கு நீயே அடித்துக்கொள்ளாதீர்.
யான் என்னுடைய ஆட்சி அதிகாரத்தை நிலை நாட்டவேண்டும்.
எம் குறுக்கே வராதே.

**குங்–குங் :**

சொர்க்கலோகத்தின் சம்மதமோ நரகலோகத்தின் சம்மதமோ
எதுவும் எமக்கு அறிய வேண்டிய அவசியமில்லை!
யான் இயற்கையாகவே எமது விருப்பப்படி மன்னராகும் தகுதியை
பெற்றுள்ளேன்.
சாவுமணி அடிப்பதைப் பற்றி நீர் பேசிக்கொண்டிருந்தால் யான்
உமக்கே சாவு மணி அடித்து விடுவேன். சுவான் அசு அவர்களே!
நீர் உமது மனச்சாட்சியைக் கேட்டுப் பாரும்
உமது வலிமை உமக்கே புரியும்!

**CHUAN—HSU:**

The ancients had a saying: there cannot be two
suns in the sky, nor two rulers among the people.
Why do you press your rivalry to me?

**KUNG-KUNG:**

The ancients had a saying: there cannot be two rulers
among the people, nor two suns in the sky.
Why are you bent on opposing me?

**CHUAN—HSU:**

Why, you. . . you mountain echo!

**KUNG—KUNG:**

I must satisfy my impulse to become ruler.

**CHUAN-HSU:**

But what necessity urges youto become ruler?

**KUNG—KUNG:**

Ask the sun—why must it shine?

**CHUAN-HSU:**

Then let you try your strength with me.

**KUNG—KUNG:**

*And let you try your strength with me.*

*Shouts of "War! War! War!" from the massed soldiery. Clamour of fighting, clashing of weapons, sounds of blood spurting, thuds of falling bodies, thunder of trampling feet.*

**OLD PEASANT** *(bearing a ploughshare be makes his way across the battlefield):*

My heart's blood is quite dried up.
Battle has been joined again over my fields of corn.
When will the Yellow River run clear,
when will man's life come to an end?

**சுவான்—அசு :**

*நமது முன்னோர்கள் பழமொழி ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள் : ஒரு வானில் இரண்டு சூரியனோ அல்லது ஒரு நாட்டிற்கு இரண்டு மன்னர்களோ இருக்கக்கூடாதென்று.*
*உமது வீண் வீராப்பை ஏன் எம்மிடம் காட்டுகிறாய்?*

**குங்—குங் :**

*நமது முன்னோர்கள் ஒரு நாட்டிற்கு இரண்டு மன்னர்களோ ஒரு வானில் இரண்டு சூரியனோ இருக்கக்கூடாதென்று சொல்லியிருக்கும்போது நீ ஏன் எம்மிடம் மல்லுக்கு நிற்கின்றாய்?*

**சுவான்—அசு :**

*ஏன் நீ... நீ... சத்தம் எதிரொலிக்கின்றது மலைகளெங்கும்.*

**குங்—குங் :**

*மன்னர் மகுடத்தைச் சூடி எமது ஆசையை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும்.*

**சுவான்—அசு :**

*நீர் மன்னராக வேண்டுமென்று உன்னை ஆட்டுவிப்பது எதுவோ?*

**குங்—குங் :**

*நீர் சூரியனைக் கேளும் – ஏன் ஒளிருகின்றாய் என்று?*

**சுவான்—அசு :**

*அப்படியென்றால், நீர் உமது வீர தீர பராக்கிரமத்தை எம்மிடம் காட்டும்.*

**குங்—குங் :**

*அப்படியே ஆகட்டும்; நீயும் உமது வீர தீர பராக்கிரமத்தை எம்மிடம் காட்டும்.*

*போர் முரசு கொட்டுகிறது. 'போர்...!போர்...!போர்...!' , போர்வாள்கள் மோதிக்கொள்ளும் சத்தங்கள், பீச்சியடிக்கும் இரத்தங்கள், வெட்டுண்டு வீழும் உடல்களின் சத்தங்கள் இடிமுழக்கம்போல் ஒலிக்கும் பாதங்கள்.*

**வயதான விவசாயி :** *(தனது தோளில் கலப்பையைச் சுமந்தவாறு அவ்வழியே வருகின்றார்.)*

*அய்யோ..., எனனோட இதயத்திலெ உள்ள ரெத்தமெல்லாம் சுண்டி விடும்போலெ இருக்கே.*

*என்னோடெ சோளக்காட்டுலெ மீண்டும் போர் நடந்து கொண்டிருக்கிறதெ.*

*ம்... எப்ப மஞ்சல் நதியிலெ தெளிந்த நீரு ஓடுறது, எப்ப மனித வாழ்க்கெ ஒரு விடிவுக்கு வரெது?*

**SHEPHERD BOY** *(guiding his flocks across the battle-field):*

Ah! I should not have reared those fighting dogs,
usually they fought over crusts of bread,
but when that was finished they ate heads of sheep.
I must take my sheep and flee.

*A borde of wild men enter. They are armed. They pass across the battlefield from the opposite direction.*

**WILD MEN:**

Let us make merry while the time favours it.
Let us go and join the battle beyond the mountain.
The hair bends whither the wind blows;
Who ever wins we stand to gain.

*Beyond the mountain is beard: "Long live Chuan- hsu! Long live the emperor!" Trampling offeet, cries ofpursuit: "Traitors, you shall not escape. Heaven is about to strike you down!"*

*Kung-kung bounds forth from beyond the mountain at the head of his followers. His hair is shorn, his body tattooed, his loins garbed in plantain leaves. There are wounds on his body; his bronze sword and stone weapons are drip- ping with fresh blood.*

**KUNG-KUNG:**

Oh shame! Oh , horror! I am utterly defeated.
Would I had the old willain's skull
to carve into a wine-cup!
*He licks blood from his weapons and scowls with immense ferocity.*
Here is the northern pillar of heaven, the mountain of Puchou,
my life span has been cleft as is this mountain.
Comrades- in-arms, though I may not live to be king,
I cannot make my peace with that old scoundrel.

**ஆட்டிடையன்:** ***(தனது ஆடுகளை ஓட்டிக்கொண்டு அவ்வழியாக வருகிறான்)***

*அய்யோ...!சண்டபோடும் நாய்களுக்குக் குறுக்கே வந்துருக்கவேகூடாது. மொதல்ல இதுங்க ஒரு துண்டு ரொட்டிக்கு அடிச்சுக்குங்க. அப்புறமா அது தீந்து போச்சினா எனது ஆட்டுத் தலையைக் கடிச்சி திண்ணுபுடுங்க. ஆட்டெ ஓட்டிட்டு இங்கிருந்து தப்பிச்சி ஓடிப்போயிரணும்டா சாமி.*

***ஆயுதம் தாங்கிய காட்டுவாசிகளின் கூட்டம் ஒன்று போர்க்களத் திசையை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது.***

**காட்டு வாசிகள் :**

*வாங்க சாமியோய்! ... காத்தடிக்கும்போதே நாம தூத்திக்கலாம்*
*வாங்கோ...வாங்கோ... போர் நடக்கறெ மலெ அடிவாரத்தெக்கு*
*போலாம் சாமிங்களோய்*
*காத்தடிக்கிற பக்கம் மரம் சாயத்தான் செய்யும்.*

***மலையின் முகட்டை தாண்டி எதிரொலிக்கிறது: 'வாழ்க சுவான்—அசு ! வாழ்க மன்னர்!' பாதத்தின் அதிர்வு ஓசைகள். தேடும் சத்தங்கள்; துரோகிகளே இனிமேல் நீங்கள் தப்பிக்க முடியாது. நீங்கள் சொர்க்கத்தால் தண்டிக்கப்படப் போகிறீர்கள்.***

***குங்—குங் சுவற்றில் அடித்த பந்துபோலத் திரும்பிச் செல்கிறான் தன்னுடைய படைகளுடன். அவன் தலை மொட்டை அடிக்கப்பட்டுள்ளது. உடல் முழுவதும் வெட்டுக் காயங்கள் மற்றும் கரும்புள்ளி செம்புள்ளி குத்தப்பட்டுள்ளது. அவனுடைய போர் வாள்களும் கல் ஆயுதங்களும் புதிய இரத்தத்தால் நனைக்கப்பட்டுள்ளன.***

**குங்—குங் :**

*ஆ. . . அவமானம் ! ஆ. . . வெட்கக்கேடு. . .*
*யான் படுமோசமாகத் தோற்கடிக்கப்பட்டுவிட்டேன்*
*அரக்கனின் கபால ஓடு கிடைத்தால்*
*அதை மதுக் கோப்பையாக்கிவிடுவேன் !*
*அவன் போர் வாளிலிருக்கும் இரத்தத்தை நக்குகிறான்*
*பெரும் கோபம் கொண்டு கர்ஜிக்கின்றான்.*
*இதோ புசுவோ மலை, சொர்க்கத்தின் வடதிசைத் தூண்*
*எனது ஆயுட்காலம் புசுவோ மலையைப்போல இரண்டாகப் பிளக்கப் பட்டுவிட்டது*
*ஆயுதம் ஏந்திய தோழர்களே! நான் இனி*
*உயிரோடு இல்லாமல் போகலாம்*
*நான் அந்தக் கிழட்டு நாதாரியோடு சமாதானம் செயதுக்கொள்ள விரும்பவில்லை.*

You have depended on me up to now:
now I have need of your lives.

*The followers pick up the fallen fruit and eat of it .*

The god of hunger is calling out from our stomachs!
They say the magic fruit of Puchou gives unlimited
strehgth to the eater:
there is still a moment before the universe shivers asunder.
Go on, get a bellyful of it!

*The sound of pursuit becomes more and more insistent.*

The war-cries of the foe are like the fury of the breakers:
they but hasten this helpless vessel to the bottom.
My followers! Lend me your skulls!
Crack this northern pillar of heaven!
Crack it!

*The troaps rush headforemost against the mountain wall. Thunder reverberates and lightning plays all round: Then, a great thunder-clap, the mountain splits apart and the vault of heaven crashes down. A black cloud billows up. Kung-kung's followers fall dead at the foot of the mountain.*

**CHUAN- HSU** (*naked , his hair dishevelled, in build like a huge ape. He leads his men, armed like himself from the battlefield):*

Rebels, where do you think you will flee to?
The gods strike swiftly! Great heavens, what is this?
Rocks and stones fly through the air, the earth
shudders, the mountain is bursting asunder.
Aaaaah ... ! All is chaos, chaos! What can be happening?

*The thunder and lightning became more and more fierce. A flash of lightning reveals the bodies of Kung- kung , Chuan - hsu and their followers lying scattered about. After a while the thunderclaps becomes violent ami grallually die away. The uhole stage is in darkness. Silence of five minutes.*

இதுவரையிலும் நீ எம்மைச் சார்ந்திருந்தாய்.

இப்போது உனது உயிர் எனக்குத் தேவைப்படுகிறது.

**ஆதரவாளர்கள் மண்ணில் விழுந்த பழங்களை எடுத்து தின்னுகிறார்கள்**

பசியின் கடவுள் எங்கள் வயிற்றிலிருந்து அழைக்கிறார்!

புசுவோ மலையின் அதிசயக் கனி அளவற்ற பலத்தைக் கொடுப்பதாக சொல்கிறார்கள்.

இப்பிரபஞ்சம் வெடித்துத் துண்டு துண்டாக ஆவதற்கு இன்னும் ஒருசில வினாடிகளே உள்ளன.

செல்லுங்கள்; சென்று வயிறுபுடைக்கத் தின்னுங்கள்!

**தேடும் சத்தம் தொடர்ந்து ஒலிக்கிறது. எதிரிகளின் போர் சத்தம் கடலலையைப்போல ஆவேசத்துடன் ஆர்ப்பரிக்கிறது.**

படை வீரர்களே! உங்கள் கபால ஓடுகளைத் தாருங்கள்!

சொர்க்கத்தின் வடதிசைத்தூரணைத் தூள் தூளாக்குங்கள்!

தூள் தூளாக்குங்கள்!

**போர்ப்படை மலையை நோக்கி முன்னோக்கிச் செல்கிறது. இடி முழங்குகிறது. மின்னல் மின்னுகிறது. நான்கு பக்கமும் பெரும் சப்தத்துடன் ஒரு மின்னல் வெடிக்கிறது. மலை இரண்டாகப் பிளக்கிறது. சொர்க்கத்தின் கூரை இடிந்து விழுகிறது. ஒரு கருமேகக் கூட்டம் மேல் நோக்கி ஊர்ந்து செல்கிறது. குங்–குங் ஆதரவாளர்கள் செத்து வீழ்ந்து கிடக்கின்றார்கள் மலையின் அடிவாரத்தில்.**

**சுவான்– அசு :** *(தனது படை வீரர்களை வழி நடத்திச் செல்கிறார்)*

**கலவரக்காரர்களே என்ன யோசிக்கின்றீர்கள், எங்கே ஓடி விடலாமென்றா?**

தெய்வம் மெதுவாக ஒரு தட்டு தட்டுகிறது. தெய்வமே என்ன இது?

பாறைகளும் கற்களும் காற்றில் பறக்கின்றன.

பூமி அதிர்கிறது. மலை துண்டு துண்டாக வெடித்துச் சிதறுகிறது.

ஆ! எங்குக் காணினும் ஒரே கலவரம்! என்ன நடந்து கொண்டிருக்கிறது?

**இடி இடிக்கிறது விண்ணைப் பிளக்கும் அளவுக்கு. மின்னல் பளீர் பளீரென மின்னுகிறது கோபங்கொண்டு. மின்னல் வெளிச்சத்தில் குங்–குங்கின் இறந்த உடல் தென்படுகிறது. சுவான்–அசு மற்றும் அவரது ஆதரவாளரின் உடல்களும் அங்காங்கே சிதறிக் கடக்கின்றன.சிறிது நேரத்தில் இடி முழக்கத்தின் உக்கிரம் குறைந்து கொஞ்சம் கொஞ்சமாக மறைந்துவிடுகிறது. மேடை முழுவதும் ஒரே கும்மிருட்டாக இருக்கிறது. ஐந்து வினாடிகள் பேரமைதி.**

*Sound of swimmers approaching from afar. Women's voices in the darkness:*

— The thunderclaps have ceased.
— The lightning has died away.
— The battle of light and dark is over.
— What of the weary sun?
— It is driven out of the sky.
— Has the fabric of heaven been tom asunder after all?
— Have the forces of dark, once driven away,
now crept back?
— What can be done with the rent fabric of heaven?
— Shall we smelt more coloured stone to repair it?
— Such coloured dross can serve no purpose now:
however far it is set in decay, we should not patch it up again. Let our newly created sun issue forth, then will it shine through all the inner world and the outer. The limits of the celestial sphere serve no purpose now.
— But the new sun will surely become weary?
— We must be for ever creating new light and heat for it.
— Ugh! Everywhere underfoot are the remains of men's bodies.
— What shall we do with them?
— Bear them to the niches and mould them into gods.
— Yes and set them playing silent music as we once did.
— The new sun, my sister, why has it not yet risen?
— It burns too fiercely, we fear it will explode;
we have it still plunged in the sea.
— Ah! We now feel new warmth.
— Our hearts are like crimson carp, leaping in a crystal bowl.
— We desire to embrace all things.
— Let us sing a song of welcome to the newly created sun.

*வெகுதூரத்திலிருந்து இருட்டில் பெண்களின் குரல்கள் ஒலிக்கும் சத்தம் கேட்கிறது.*

– இடி முழக்கம் முற்றிலும் நின்றுவிட்டது.
– மின்னல் முற்றிலும் மறைந்துவிட்டது
– போரின் இருட்டும் வெளிச்சமும் காணாமல் போய்விட்டன.
– சோம்பேறி சூரியன் என்ன ஆனது?
– அது விண்ணிலிருந்து அகற்றப்பட்டுவிட்டது.
– சொர்க்கத்தின் விதானம் தூள் தூளாக உடைக்கப்பட்டுவிட்டதா?
– விரட்டப்பட்ட இருட்டின் தீய சக்தி மெல்ல நம்மை நோக்கி ஊர்ந்து வருகிறதா?
– சொர்க்கத்தில் ஏற்பட்ட விரிசலை என்ன செய்யலாம்?
– இன்னும் கொஞ்சம் வர்ணப் பாறைகளை உருக்கலாமா விரிசலை சரிசெய்ய?
– அந்த மாசுப்பட்ட வர்ணம் இனிப் பயனற்றது : அது வெகு நாள்களுக்கு முன்பே கெட்டுப்போய் நாற்றமடிக்கிறது. அதைக் கொண்டு இனி விரிசலை அடைக்க முடியாது. நாம் உருவாக்கிய சூரியனைப் பற்றி யோசிப்போம். எப்போது இது சொர்க்க லோகத்திலும் பூலோகத்திலும் ஒளிரும்? சொர்க்கலோகத்தின் எல்லைகளால் எந்தப் பயனும் இல்லை.
– ஆனாலும், புதிய சூரியன் கூடிய விரைவில் சோர்ந்து போய் விடலாம்.
– நாம் அதற்குப் புதிய ஒளியையும் வெப்பத்தையும் உருவாக்கிக் கொண்டே இருக்கவேண்டும்.
– ஆ! எங்குக் காண்பினும் நமது காலடியில் ஆடவர்களின் பிணங்கள்.
– என்ன செய்யலாம் அப்பிணங்களை?
– தூக்கிக்கொண்டு வாருங்கள் எல்லாவற்றையும். மாடத்தில் வைத்துக்கடவுள் சிலையாக்குங்கள்.
– ஆம். நாம் ஒருகாலத்தில் செய்ததுபோல் அவைகளும் வாய்மூடி வீணைவாசித்துக் கொண்டிருக்கட்டும்.
– என் சகோதரியே! புதிய சூரியன் ஏன் இன்னும் உதயமாகாமல் இருக்கின்றது?!
– அது மிகவும் உக்கிரமாக எரிந்துக் கொண்டிருக்கிறது. வெடித்து விடும் என்று அஞ்சுகிறோம். ஆகையால் அதை இன்னும் கடலில் அமுக்கி வைத்துள்ளோம்.
– நமது இதயங்கள் அன்பைப் பொழியும் அமுதசுரபி.
– நாம் அனைத்தையும் கட்டித்தழுவ ஆசைப்படுகிறோம்.
– வாருங்கள் புதிய சூரியனுக்கு வரவேற்புப் பாடலொன்றைப் பாடுவோம்.

***In Unison:***

Sun! although you are still far away,
Sun! although you are still far away,
now the morning bell can be heard pealing in the sea:
ding-dong, ding-dong, ding-dong!

Ten thousand golden arrows shoot at the Wolf of Heaven;
the Wolf of Heaven grieves in the dark.
Now the funeral knell can be heard in the sea:
ding-dong, ding-dong, ding-dong!

We wish to quaff a stoup of Wine.
Drink to the everlasting life of our new sun.
Now the drinking bells sound in the sea:
ding-dong, ding-dong, ding-dong!

*The stage suddenly lights up. Only a white curtain is to be seen. The stage-manager appears.*

**STAGE-MANAGER** ***(bows to the audience):***

Ladies and gentlemen, you have become tired of living in the foetid gloom of this dark world. You surely thirst for light. Your poet, having dramatized so far, writes no more. He has, in fact, fled beyond the sea to create new light and heat. Ladies and gentlemen, do you await the appearance of a new sun? You are bid to create it for yourselves. We will meet again under the new sun.

*Notes :* Material for the play has been taken from the following sources:

**குழுவாக:**

*சூரியனே! நீ இன்னும் தொலைதுரத்திலேயே இருந்தபோதிலும்*
*சூரியனே! நீ இன்னும் தொலைதுரத்திலேயே இருந்தபோதிலும்*
*கடலைக் கிழித்துக் கொண்டு நீ வெளியே வரும் அதிகாலை*
*மணிஓசை இப்போது கேட்கிறது*
*டிங் டாங் – டிங் டாங் – டிங் டாங் !*

*பல்லாயிரம் அம்புகள் சொர்க்கத்திலிருக்கும் ஓநாய்களைத் தாக்குகின்றன*
*சொர்க்கத்தின் ஓநாய்கள் இருட்டில் வளருபவை*
*கடலிலிருந்து எழும் சாவு மணி ஓசையே கேட்க முடிகிறது*
*டிங் டாங் – டிங் டாங் – டிங் டாங் !*

*நாங்கள் அமிர்தத்தைப் பருக விரும்புகிறோம்*
*இச் சாவா அமிர்தத்தை நமது புதிய சூரியனுக்கும் கொடுப்போம்*
*பருகும் ஓசை கேட்கிறது கடலில்*
*டிங் டாங் – டிங் டாங் – டிங் டாங் !*

***மேடையில் திடீரென்று விளக்கு வெளிச்சம் பளிச்சிடுகிறது. வெண்திரை மட்டும் தென்படுகிறது. நாடக இயக்குநர் மக்கள் முன் தோன்றுகிறார்.***

**நாடக இயக்குனர்** ***(மக்களைத் தனது சிரம் தாழ்த்தி வணங்குகிறார்)***

*பெரியோர்களே! தாய்மார்களே! இந்த இருள் சூழ் துயர் நிறைந்த உலகத்தில் வாழ்க்கை சலிப்படைந்து விட்டது. நிச்சயமாக உங்களுக்கு விடியல் தாகம் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. உங்கள் கவிஞர் இதுவரை நாடகமாக்கிக் காட்டினார். இனி எழுதுவதற்கு எதுவுமில்லை. உண்மையிலே உங்கள் கவிஞர் கடல் தாண்டிப் பயணித்தார் புதிய சூரியனையும் புதிய வெப்பத்தையும் படைக்க. பெரியோர்களே! தாய்மார்களே! புதிய சூரியனின் வருகைக்காகக் காத்திருப்பீர்களா? உங்களுக்குத் தேவையான சூரியனை நீங்களே படைக்கும் ஆற்றல் பெற்றவர்களாக இருக்கின்றீர்கள். புதிய சூரியனுக்குக் கீழ் நாம் மீண்டும் சந்திப்போம்.*

*குறிப்பு : இந்நாடகத்திற்கான கரு கீழ்க்கண்ட நூலிலிருந்து எடுத்துக் கையாளப்பட்டுள்ளது:*

*Lieh Tzu* (ancient Taoist philosophical work) : " ... Heaven and earth are also material things, and things are subject to deficiencies. Hence in ancient times the goddess Nu-kua forged five-coloured rocks to fill in the cracks, and broke off the turtle's feet and set them up as the four pillars of the sky. There- after, when Kung kung struggled with Chuan- hsu for kingship, in his fury he threw himself against Puchou Mountain. He snapped this pillar of heaven and upset the balance of the four-cornered earth. As a result, the sky tilted down at the northwest corner, so that the sun, the moon and the stars now move in that direction. The earth being inclined in the southeast, all watercourses drain away thither."

***Shuo Wen*** *(the Han dynasty dictionary):* "Nukua was an ancient goddess, who shaped the ten thousand things .... She first invented the pipes and flute."

***Shan Hai Ching*** *(ancient book of folklore and legends) :*

"To the north, the Puchou Mountain faces Chu- pi Mountain, and Yuehchung Mountain is not far away; to the east it faces the salt marsh of Yu, which is where the Yellow River disappears underground after leaving its turbid, seething source. Here there are delicious fruits which are like peaches; the leav- es are like those of the jujube tree and the flowers are yellow with a red calyx. These fruits can refresh one when one is fatigued."

***லியெக்சு (தாவோயிச தத்துவம்) :*** "...சொர்க்கம் மற்றும் பூமி இரண்டுமே கலவைப் பொருட்களால் ஆனவை. ஆகையால் பொருட்களுக்குப் பற்றாக்குறை ஏற்படுகிறது. மேலும், முன்னொரு காலத்தில் தேவதை நூவா ஐந்த நிறப் பாறைகளை உருக்கிச் சொர்க்கத்தில் ஏற்பட்ட விரிசலை அடைத்தார். ஆமையின் கால்களைப் பிய்த்து எடுத்து ஆகாசத்தின் நான்கு தூண்களாக்கினார். சில காலத்திற்குப் பிறகு குங்–குங், சுவான்–ஹசுவுடன் மன்னர் நாற்காலிக்காக வாரிசுரிமைப் போர் புரிந்தான். பிறகு கடும் சினம் கொண்டு இச்சொர்க்கத்தின் ஒரு தூணை உடைத்து எரிந்து நிலைகுலையச் செய்தான். இதன் விளைவாக ஆகாசம் வடமேற்குத் திசையின் மூலை நோக்கிச் சாய்ந்தது. அதன் காரணமாகச் சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள் அத்திசை நோக்கி நகர்கின்றன. பூமி தென்கிழக்கு நோக்கிச் சாய்ந்துள்ளது. ஆகையால் நீர்நிலைகளெல்லாம் தென்கிழக்குத் திசை நோக்கிச் செல்கின்றன."

***சூவென்*** (ஆன்–மன்னர்களின் ஆட்சிக்காலப் பேரகராதி) நூவா ஒரு புராணகாலத் தேவதை. அவர் சுமார் பத்தாயிரம் பொருட்களை ஒழுங்கு படுத்தியுள்ளார். அத்தேவதை முதன்முதலில் கண்டறிந்து ஒழுங்குப்படுத்தியது புல்லாங்குழல் ஆகும்.

***சென் ஆய் சிங்*** (நாட்டுப்புறக் கதைகள் மற்றும் காவியங்கள்) :

வடதிசையில் புசுவோ மலை யூக்சுங் மலையைப் பார்த்தவாறு அருகிலேயே அமைந்துள்ளது. யூக்சுங் மலையானது மஞ்சள் நதி மறையும் திசையான கிழக்குத் திசையில் முகத்துவாரத்தை நோக்கியுள்ளது. இங்கு ருசிமிகு பழங்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. அப்பழங்கள் பீச் பழங்கள் போல உள்ளன. இலைகள் இலந்தை மர இலைகளைப்போல உள்ளன. பூக்கள் நட்சத்திரங்களைப் போலச் சிவப்புக் கலந்த மஞ்சள் நிறத்தில் உள்ளன. இப்பழங்கள் தளர்ந்து போனவர்களுக்குப் புத்தூக்கத்தை அளிக்கக் கூடியன.

# The Nirvana of the Feng and Huang

In Arabia in ancient times there lived a magical bird, the phoenix. When it had reached the age of 500 years, it made a pyre of fragrant wood and committed itself to the flames. Then from the dead ashes it returned to life never to die again with a fresh and extraordinary beauty.

Now, this bird may well be the Feng-Huang bird of China. The Feng is the male, the Huang the female. In the Yen Kung Tu (Elucidation of the Illustrations of Confucius) we read: "The Feng-Huang is the essence of fire; it is born on Mount Tanhsueh. "According to the Kuang Ya dictionary: "As to the Feng-Huang ... the cry of the male bird is jig-jig, that of the female bird is jug-jug. "

## *Prelude*

The eve of the new year is at hand and in the sky
the Feng-Huang pair dart here and about.
Mournful strains are heard as they fly away,
bearing fragrant twigs in their bills they return,
fly back to the Tanhsueh Mountain.

To the right is the withered plane tree,
to the left the parched spring;
before the mountain the limitless expanse of the sea,
behind it the vast dismal plains,
over the mountain the frozen sky traversed by icy winds.

# சாம்பல் பறவைகளின் இன்னிசை

*முன்னொரு காலத்தில் அரேபியாவில் சாம்பல் பறவை பீனிக்ஸ் வாழ்ந்து வந்தது. வயது ஐநூறு ஆண்டுகளை அடைந்த பிறகு, அப்பறவை மூலிகைச் சுள்ளிகளால் தீ மூட்டி, அத்தீயில் வீழ்ந்து உயிரை மாய்த்துக் கொண்டது. மீண்டும் தனது சாம்பலில் இருந்து என்றும் சாகா வரம் பெற்று பெரும் பேரழகுடன் உயிர்பெற்று வந்தது.*

*அப்பறவை சீனாவில் பெங்–அங் என்று அழைக்கப்படுகின்றன. பெங் என்பது ஆண் பறவை. அங் என்பது பெண் பறவை. பெங்–அங் என்பது தீயின் உட்பொருள் என்றும் இப்பறவைகள் டன் சு என்ற மலைமீது பிறந்தன என்றும் யென் குங் துவில் (கன்பூசியசின் தத்துவ விளக்கத்திலிருந்து) படித்திருக்கிறோம். குவாங் ய என்ற அகராதியின்படி ஆண் பறவை சிங்–சிங் என்றும் பெண் பறவை சுங்–சுங் என்றும் கூவுகின்றது.*

## தொடக்கம்

புத்தாண்டின் முன் அந்திப்பொழுது வானத்தில் தெரிகிறது
பெங்–அங் இணை அங்கும் இங்குமாக உலாவுகிறது
வெகு தூரம் அவை பறந்து சென்றபோதும்
துயர்மிகு கீதம் கேட்டுக்கொண்டே இருக்கிறது
தமது அலகால் சுள்ளிகளைச் சுமந்து கொண்டு
மீண்டும் டன் சு மலை உச்சிக்கு வருகின்றன

டன் சு மலையின் வலது புறத்தில்
காய்ந்த அத்தி மரங்கள்
இடது புறத்தில் வறண்ட நீரோடை
முன்புறத்தில் பரந்து விரிந்த கடல்
பின்புறத்தில் வறண்ட சமவெளி
மலையின் உச்சியில்
உறைப் பனிக்காற்றால் அங்கும் இங்குமாக
அலையும் மேகக் கூட்டங்கள்.

The sky is now dark with evening,
the fragrant wood is heaped high.
The Feng is weary with flying,
the Huang is weary with flying;
their hour of death approaches.

The Feng pecks the twigs:
points of flame fly out.
The Huang fans the sparks:
wreaths of fragrant smoke rise up.

The Feng pecks on
and the Huang fans the flame.
The fragrant smoke overspreads the peak,
the glow of the fire suffuses the peak.

The dusk has now deepened,
the fragrant wood is burning.
The Feng is weary with pecking,
the Huang is weary with fanning:
their hour of death is at hand.

Alas for the Feng and Huang!
The Feng dances, dances high and low,
the Huang sings, sings in tragic vein.
The Feng dances,
the Huang sings her song.
The commonalty of birds flock thither,
fly in from the skies to witness the death-rite.

மாலை நேரம், வானம் இப்போது இருண்டு வருகிறது
மூலிகைச் சுள்ளிகள் உயரமான குவியலாக வைக்கப்பட்டுள்ளன
பெங் பறந்து பறந்து மிகவும் சோர்வுற்றிருக்கிறது
அங்'கும் பறந்து பறந்து மிகவும் சோர்வுற்றிருக்கிறது
மரணத்தின் கடைசி நிமிடங்கள்
அவைகளை நெருங்கிக்கொண்டிருக்கின்றன.

பெங் சுள்ளிகளைத் தீ குண்டத்தில் போடுகிறது
தீயின் மையப்பகுதி வான் நோக்கி எரிகிறது
அங் நெருப்புப் பொறிகளை ஊதுகிறது
நறுமணமிக்க புகை மேல்நோக்கி எழுகிறது.

பெங் சுள்ளிகளைத் தீ குண்டத்தில் போட்டவாறேயுள்ளது
அங் தீச்சுவாலையை ஊதிக்கொண்டேயுள்ளது
நறுமணமிக்க புகை மலைமுகடெங்கும் பரவுகிறது
தீச்சுடர் மலைமுகடெங்கும் பரவுகிறது.

வானத்தை இப்போது நன்றாக இருள் கவ்விக்கொண்டது
மூலிகைச் சுள்ளிகள் எரிந்துகொண்டிருக்கின்றன
சுள்ளிகளைத் தீ குண்டத்தில் போட்டுப்போட்டுப்
பெங் களைப்படைந்துவிட்டது
அங்கும் நெருப்பை ஊதி ஊதிக் களைப்படைந்துவிட்டது:
அப்பறவைகளின் மரணம் நெருங்கிக்கொண்டிருக்கிறது.

அய்யோ பாவம் பெங்–அங் !
பெங் விண்ணுக்கும் மண்ணுக்குமாக நடனமாடுகிறது
அங் தனது சோகக்குரலில் பாடிக்கொண்டே இருக்கிறது
பெங் நடனமாடுகிறது
அங் தனது கீதத்தைப் பாடுகிறது
பறவைகளின் கூட்டம் வானத்திலிருந்து
பெங்–அங் பறவைகளின்
இறப்புச் சடங்கை வேடிக்கை பார்க்கின்றன.

## *Song of the Feng*

*Jig-jig .jig-jig, jig-jig,*

*Jig-jig .jig-jig .jig-jig.*

Vast is the universe, cruel as iron.

Vast is the universe, sombre as lacquer.

Vast is the universe, rank as blood.

Universe,O universe!

Why do you exist?

Whence do you come?

Where are you cradled?

Are you an empty sphere limited in reach,

or a continuum of unlimited size?

If you are an empty sphere limited in reach

whence comes the space that contains you?

What else has existence outside yourself?

If you are infinite and all-embracing

whence comes the space that you hold in yourself?

And why does life exist within you?

Are you a life-endowed flux?

or are you a lifeless mechanism?

I raise my brow and ask of Heaven,

but Heaven is reserved and aloof, has no knowledge of these things.

I bend my brow and ask the earth,

# பெங் பறவையின் கீதம்

***சிங்—சிங்! சிங்—சிங்! சிங்—சிங்!***

***சிங்—சிங்! சிங்—சிங்! சிங்—சிங்!***

*இப்பிரபஞ்சம் மிகவும் பெரியது*
*இரும்பு போன்று உணர்ச்சியற்றது*
*இப்பிரபஞ்சம் மிகவும் பெரியது*
*அரக்குப் போன்று கடும்துயரத்தால் நிரப்பியிருக்கிறது*
*இப்பிரபஞ்சம் மிகவும் பெரியது*
*இரத்தம் போன்று துர்நாற்றமடிக்கிறது.*

*பிரபஞ்சமே! ஓ பிரபஞ்சமே!*
*நீ ஏன் நிலைகொண்டிருக்கின்றாய்?*
*எப்போது தோன்றினாய்?*
*எங்கு நீ மிதந்துகொண்டிருக்கின்றாய்?*
*கைக்கெட்டும் தூரத்தில் இருக்கும்*
*வெற்று உருண்டையா?*
*வரையறுக்கப்படாத எல்லையின் தொடர்ச்சியா?*
*நீ எட்டும் தூரத்திலுள்ள*
*வெற்று உருண்டையாக இருந்தால்*
*எப்பொழுது அண்டவெளிக்குள் வந்தாய்?*
*உனக்கு வெளியே*
*என்னென்ன இருக்கின்றன?*
*அனைத்தையும் அரவணைக்கக்கூடிய*
*எல்லையற்ற — நீ*
*எப்பொழுது அண்டவெளிக்குள் வந்து*
*உன்னை நிலைகொள்ளச் செய்தாய்?*
*உயிரினங்கள் ஏன் உனக்குள் இருக்கின்றன? — நீ*
*உயிரினைக் கொடையாகப் பெற்ற பூகோளமா? — நீ*
*உயிரற்ற இயக்கமா — நீ?*
*எனது புருவத்தை உயர்த்தி?*
*சொர்க்கத்தைக் கேட்கிறேன்*
*சொர்க்கத்திற்கு இதைப்பற்றியான*
*அறிவின்றி வெகுதொலைவிலுள்ளது?*
*எனது புருவத்தைத் தாழ்த்திப் பூமியே கேட்கிறேன்*

but the earth is dead, it has no breath.
I look out and ask the sea,
but the sea is raising its voice in grieving.

Ah!
To exist in the mire and gloom of this world
would cause even a diamond sword to rust.
Universe, O universe,
let me rail at you with all my powers:
you blood-besmirched slaughter-house,
prison surfeited with misery,
graveyard clamorous with ghostly hordes,
hell astir with capering demons,
why should you exist at all?

We fly westwards:
the west, alike, is a slaughter-house.
We fly eastwards:
the east, alike, is a prison.
We fly southwards:
the south, alike, is a grave.
We fly northwards:
the north, alike, is a hell.
Living in such a world
we can but learn from the lament of the sea.

பூமி சுவாசமின்றிச் செத்துக் கிடக்கிறது
நேராக நிமிர்ந்து கடலைக் கேட்கிறேன்
கடல் துயரத்தோடு தனது குரலை எழுப்புகிறது.

ஆ...!
தூய்மைகெட்ட துயர்மிகு உலகத்தில்
வைரக் கத்திகூடத் துருப்பிடித்துக்கொள்ளும்
பிரபஞ்சமே..., ஓ... பிரபஞ்சமே...,
என்னுடைய சக்தி முழுவதையும் பயன்படுத்தி
உன்னைத் திட்ட விடு – நீ
இரத்தக் கறை படிந்த கொலைக் களம்
துயர்மிகு அருவருப்பான சிறைச்சாலை
கவர்ச்சிகரமான பேய்க்கூட்டங்கள் நிறைந்த கல்லறை
குத்தாட்டம் போடுகின்ற மோகினிகள் நிறைந்த நரகம்.

நாங்கள் மேற்கு நோக்கிப் பயணிக்கின்றோம்
மேற்குத் திசையோ கொலைக்களம் போல உள்ளது
நாங்கள் கிழக்கு நோக்கிப் பயணிக்கின்றோம்
கிழக்குத் திசையோ சிறைச்சாலை போல உள்ளது
நாங்கள் தெற்கு நோக்கிப் பயணிக்கின்றோம்
தெற்கு திசையோ கல்லறைப் போலுள்ளது
நாங்கள் வடக்கு நோக்கிப் பயணிக்கின்றோம்
வடக்குத் திசையோ நரகம் போலுள்ளது
இவ்வுலகத்தில் வாழ்வது எங்களால் முடியும் – நீ
கடலின் மரண ஓலத்திலிருந்து கற்றுக்கொள்.

# *Song of the Huang*

*Jug-jug.jug-jug.jug-jug.*

*Jug-jug .jug-jug .jug-jug.*

Five hundred years of tears have streamed like a cataract,
five hundred years of tears have dripped like wax from candle.
Unceasing flow of tears,
filth that cannot be washed away,
flame of passion that cannot be extinguished,
shame that cannot be cleansed.
This shadowy life of ours,
towards what haven is it drifting?

Ah,
this dreamy, shadowy life of ours
is like a lonely boat on an ocean:
to the right are trackless waters,
to the left are trackless waters.
.No beacon shines ahead,
no shore is seen behind. The sail is tom,
the mast broken,
the oars have floated away,
the rudder has rotted away.
The weary boatman merely sits and moans,
the angry surge rolls over in the sea.

# அங் பறவையின் கீதம்

***சுங் சுங்! சுங் சுங்! சுங் சுங்!***

***சுங் சுங்! சுங் சுங்! சுங் சுங்!***

*ஐநூறு ஆண்டுகளின் கண்ணீர்*
*அருவிபோல ஓடியிருக்கிறது*
*ஐந்நூறு ஆண்டுகளின் கண்ணீர்*
*மெழுகுவர்த்தி போலக் கொட்டியிருக்கிறது*
*கண்ணீரின் தொடர்ப் பயணம்*
*கழுவ முடியா அவலம்*
*அணைக்க முடியாத வெறியின் சுவாலை*
*சுத்தப்படுத்த முடியாத அவமானம்*
*துயர்மிகு எங்களின் இவ்வாழ்க்கை*
*சொர்க்கத்திலிருந்து வீசப்பட்டவையா?*

*ஆ...!*
*துயர்மிகு எங்களின் கனவு வாழ்க்கை*
*கடலில் தனித்திருக்கும் ஓடம் போன்றது:*
*வலது புறத்தில் பாதையற்ற நீர்ப்பரப்பு*
*இடது புறத்திலும் பாதையற்ற நீர்ப்பரப்பு*
*முன்புறத்திலும் கலங்கரை விளக்கம் ஒளிரவில்லை*
*பின்புறத்திலும் கரை தென்படவில்லை*
*ஓடமோ ஓட்டையாகிவிட்டது*
*பாய்மரமோ ஒடிந்துவிட்டது*
*துடுப்பையோ அலை அடித்துப்போய்விட்டது*
*வழிகாட்டும் கருவியோ செயலிழந்துவிட்டது*
*சோர்வுற்ற ஓடக்காரன் வெறுமனே உட்கார்ந்துப்*
*புலம்பிக்கொண்டிருக்கிறான்*
*கோபங்கொண்ட அலைகள் கடலில்*
*ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கின்றன.*

Ah,
this shadowy, drifting life of ours
is like a drugged sleep on such a dark night as this.
Before us is sleep,
behind us is sleep.
We come like a gust of wind,
we go like a whisp of smoke.
Coming like wind,
going like smoke, sleep behind,
sleep before.
In the midst of this sleep
we are but a fleeting breath of smoke.

Ah!
What sense is there in it? What sense is there in it?
Folly. . . folly. . . folly!
There remains only grief, vexation, desolation, decay,
a back-cloth for our living corpses,
a thread running through the lives of our living corpses.

Ah!
Where is now the freshness of our youth?
Where is now the sweetness of our youth?
Where is now the splendour of our youth?
Where is now the pleasure of our youth?
Gone! Gone! Gone!
All is gone! All must go!
We are gone.
You too must go.
Grief. .. vexation ... desolation ... decay.

ஆ...!
இவ்விருள்சூழ் உலகில்
இத்துயர்மிகு எம்வாழ்க்கை
போதை உறக்கம் போன்றது
எங்களுக்கு முன்னேயும் உறக்கத்தில்
எங்களுக்குப் பின்னேயும் உறக்கத்தில்
சூறாவளி காற்றுப் போல வருகிறோம்
புகைக் கூட்டம் போலப் போகிறோம்
காற்றுப் போல வருகிறோம்
புகை போலப் போகிறோம்
பின்னேயும் தூங்குகிறோம்
முன்னேயும் தூங்குகிறோம்
இத்தூக்கத்துக்கு இடையில்
வீணான வாழ்க்கை வாழ்கிறோம்.

ஆ...!
என்ன அர்த்தம் இதில் இருக்கிறது?
என்ன அர்த்தம் இதில் இருக்கிறது?
மடத்தனம் ...மடத்தனம்...மடத்தனம்...!
எங்கும் துயரம்... தொல்லை... ஆறுதலற்ற தன்மை...
சீர்குலைவு ... நிலைகொண்டிருக்கிறது
நமது நடைப்பிணங்களுக்கான வரலாறு
நடைப்பிணங்களின் எமது வாழ்க்கையைத் தொடர்ச்சியாகப்
பறைசாற்றிக் கொண்டே இருக்கிறது.

ஆ...!
இப்போது எங்கே நமது இளமையின் புத்துணர்ச்சி?
இப்போது எங்கே நமது இளமையின் இனிமை?
இப்போது எங்கே நமது இளமையின் கோலாகலம்?
இப்போது எங்கே நமது இளமையின் மகிழ்ச்சி?
போய்விட்டது...! போய்விட்டது...! போய்விட்டது...!
எல்லாம் போய்விட்டது!
எல்லாம் போகவேண்டும்!
நாங்கள் போய்விட்டோம்.
நீயும் போகவேண்டும்!
துயரம்... தொல்லை... ஆறுதலற்ற தன்மை... சீர்குலைவு...

Ah'.
The fire flares dazzling bright,
the fragrant smoke hangs heavily in the air.
My time has now come,
my hour of death has come,
all within us, all outside us, all in all.
Farewelll Farewell!

## *Choral song of the birds*

**EAGLE:**

Haha! Feng-Huang! Feng-Huang!
In vain have you been the most magical of birds.
Are you dead? Are you dead?
Henceforth must I assert my sway over the aerial world.

**PEACOCK:**

Haha! Feng-Huang! Feng-Huang!
In vain have you been the most magical of birds.
Are you dead? Are you dead?
Henceforth let you behold the royal sheen of my plumage.

**OWL:**

Haha! Feng-Huang! Feng-Huang!
In vain have you been the most magical of birds.
Are you dead? Are you dead?
Whence comes this sweet fragrance of mouse flesh?

ஆ...!
நெருப்பு சுடர்விட்டு
அதிக பிரகாசத்துடன் எரிகிறது
மணம் கொண்ட புகை
காற்றில் அதிகமாகக் கலக்கிறது
எனக்கான நேரம் இப்போது வந்துவிட்டது
என்னுடைய இறப்பின் கடைசி மணித்துளிகள் நெருங்கிவிட்டன
அனைத்தும் நமக்குள்ளே
அனைத்தும் நமக்குவெளியே
அனைவருக்கும்
போய்வருகிறோம்! போய்வருகிறோம்!!

## பறவைகளின் குழுயிசை

**கழுகு :**

ஆகா. . .! பெங்–அங்! பெங்–அங்!
பறவைகளிலே அதிக மாயசக்திவாய்ந்தவர்கள்
என்ற வீண் மமதை கொண்டிருந்தீர்கள்
செத்துத் தொலைந்தீரா?
செத்துத் தொலைந்தீரா?
இனி என்னுடைய செல்வாக்கை இக்காற்றுலகில்
நான் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

**மயில்:**

ஆகா. . .! பெங்–அங்! பெங்–அங்!
பறவைகளிலே அதிக மாயசக்திவாய்ந்தவர்கள்
என்ற வீண் மமதை கொண்டிருந்தீர்கள்
செத்துத் தொலைந்தீரா? செத்துத் தொலைந்தீரா?
இனி என்னுடைய தோகையின் கம்பீரத் தோற்றத்தைக்
காணத்தான் போகின்றீர்கள்.

**ஆந்தை:**

ஆகா. . .! பெங்–அங்! பெங்–அங்!
பறவைகளிலே அதிக மாயசக்திவாய்ந்தவர்கள்
என்ற வீண் மமதை கொண்டிருந்தீர்கள்
செத்துத் தொலைந்தீரா?
செத்துத் தொலைந்தீரா?
எங்கிருந்து வருகிறது?
சுண்டெலி சதையினுடைய இனிய இந்நறுமணம்

**PIGEON:**

Haha! Feng-Huang! Feng-Huang!
In vain have you been the most magical of birds.
Are you dead? Are you dead?
Henceforth you may see the contentment of our docile tribe

**PARROT:**

Haha! Feng-Huang! Feng-Huang!
In vain have you been the most magical of birds.
Are you dead? Are you dead?
Henceforth listen to the eloquent discourses of our orators.

**STORK:**

Haha! Feng-Huang I Feng-Huang!
In vain have you been the most magical of birds.
Are you dead? Are you dead?
Henceforth see the strutting to and fro of our
high-stepping race.

## *Rebirth song of the Feng and Huang*

**COCKS:**

The tide of dawn has risen,
the tide of dawn has risen,
the light that died is born anew.

The tide of spring has risen,
the tide of spring has risen,
the cosmos that died is born anew.

The tide of life has risen,
the tide of life has risen,
the Feng and Huang that died are born anew.

**புறா :**

*ஆகா. . .! பெங்–அங்! பெங்–அங்!*
*பறவைகளிலே அதிக மாயசக்திவாய்ந்தவர்கள்*
*என்ற வீண் மமதை கொண்டிருந்தீர்கள்.*
*செத்துத் தொலைந்தீரா?*
*செத்துத் தொலைந்தீரா?*
*இனி எங்களுடைய தன்னிறைவான*
*வாழ்க்கையை நீங்கள் காணலாம்.*

**கிளி :**

*ஆகா. . .! பெங்–அங்! பெங்–அங்!*
*பறவைகளிலே அதிக மந்திரசக்திவாய்ந்தவர்கள்*
*என்ற வீண் மமதை கொண்டிருந்தீர்கள்.*
*செத்துத் தொலைந்தீரா?*
*செத்துத் தொலைந்தீரா?*
*இனி எங்களுடைய பேச்சாளர்களின்*
*அழகான சொற்பொழிவை நீங்கள் கேட்கலாம்.*

**கொக்கு :**

*ஆகா. . .! பெங்–அங்! பெங்–அங்!*
*பறவைகளிலே அதிக மந்திரசக்திவாய்ந்தவர்கள்*
*என்ற மமதை கொண்டிருந்தீர்கள்.*
*செத்துத் தொலைந்தீரா?*
*செத்துத் தொலைந்தீரா?*
*இனி எங்கள் இனத்தின்*
*கம்பீர நடையை நீங்கள் பார்க்கலாம்.*

## பெங்–அங் பறவைகள் உயிர்த்தெழும் கீதம்

**சேவல்கள் :**

*விடியற்காலையின் அலை உயரே எழுகிறது*
*விடியற்காலையின் அலை உயரே எழுகிறது*
*இறந்த ஒளியானது புதியதாகப் பிறக்கிறது.*

*விடியற்காலையின் வசந்தம் உயரே எழுகிறது*
*விடியற்காலையின் வசந்தம் உயரே எழுகிறது*
*இறந்த பிரபஞ்சமானது புதியதாகப் பிறக்கிறது.*

*வாழ்க்கையின் அலை உயரே எழுகிறது*
*வாழ்க்கையின் அலை உயரே எழுகிறது*
*இறந்த பெங்–அங் பறவைகள் புதியதாகப் பிறக்கின்றன.*

**FENG AND HUANG SING TOGETHER:**

We are born again
we are born again.
The one that is all is born again,
the all that is one is born again.
We are he, they are me,
you are in me and I in you:
I am therefore you,
you are therefore me.
The fire is the Huang,
the Feng is the fire.
Soar then, soar!
Sing for joy, sing for joy!

We are made anew, we are purified.
We are resplendent, we are steeped in fragrance.
The one that is all is steeped in fragrance,
the all that is one is steeped in fragrance.
Fragrance steeped are you, fragrance steeped am I,
fragrance steeped is he, fragrance steedped is fire.

Fire are you,
fire am I,
fire is he,
fire is fire.
Soar then, soar!
Sing for joy, sing for joy!

## பெங் மற்றும் அங்கின் கூட்டிசை

நாங்கள் மீண்டும் பிறந்திருக்கிறோம்
நாங்கள் மீண்டும் பிறந்திருக்கிறோம்
அனைத்துமான ஒன்று மீண்டும் பிறந்திருக்கிறது
ஒன்றான அனைத்தும் மீண்டும் பிறந்திருக்கின்றன
நாங்கள்தாம் அவை, அவர்கள்தாம் யாம்
நீ என்னுள் இருக்கின்றாய்
நான் உனக்குள் இருக்கின்றேன்
நான்தான் ஆகையால் நீ
நீ தான் ஆகையால் நான்
தீதான் அங்
பெங்தான் தீ
உயரே எழு
மேலும் உயரே எழு
மகிழ்ச்சிகாகப் பாடு
மகிழ்ச்சிகாகப் பாடு

நாங்கள் புதியதாகப் பிறந்திருக்கிறோம்
நாங்கள் பரிசுத்தமாகியிருக்கிறோம்
நாங்கள் அதீத பிரகாசத்துடன் இருக்கிறோம்
நறுமணத்தில் குளித்திருக்கிறோம்
ஒன்றான அனைத்தும் நறுமணத்தில் குளித்திருக்கின்றன
அனைத்துமான ஒன்று நறுமணத்தில் குளித்திருக்கின்றது
நறுமணத்தில் குளித்தது நீயா?
நறுமணத்தில் குளித்தது நானா?
நறுமணத்தில் குளித்தது அவனா?
நறுமணத்தில் குளித்தது தீ
நீ தீயா?
நான் தீயா?
அவன் தீயா?
தீ தீதான்
உயரே எழு
மேலும் உயரே எழு!
மகிழ்ச்சிக்காகப் பாடு
மகிழ்ச்சிக்காகப் பாடு!

We are pledged, we are deeply in love,
we are devoted, we are truly matched.
The one that is all is truly matched,
the all that is one is truly matched.
Truly matched are you; truly matched am I,
truly matched is he, truly matched is fire.

Fire are you,
fire am I,
fire is he,
fire is fire.
Soar then, soar!
Sing for joy, sing for joy!

We are vigorous, we are free,
we are fearless, we are immortal,
The one that is all is immortal,
the all that is one is immortal.
Immortal are you, immortal am I,
Immortal is he, immortal is fire.

Fire am I,
fire are you,
fire is he,
fire is fire.
Soar then, soar!
Sing for joy, sing for joy!

நாங்கள் உறுதியோடு இணைந்திருக்கிறோம்
நாங்கள் ஆழமான காதல் கொண்டிருக்கிறோம்
நாங்கள் அர்ப்பணிப்போடு இருக்கிறோம்
நாங்கள் உண்மையாகவே பொருத்தத்தோடு இருக்கிறோம்
ஒன்றான அனைத்தும் உண்மையாக இணைந்திருக்கின்றன
அனைத்துமான ஒன்று உண்மையாக இணைந்திருக்கின்றது
நீ உண்மையிலே இணைந்திருக்கிறாய்
நான் உண்மையிலே இணைந்திருக்கின்றேன்
அவன் உண்மையிலே இணைந்திருக்கின்றான்
தீ உண்மையிலே இணைந்திருக்கின்றது

நீ தீயா?
நான் தீயா?
அவன் தீயா?
தீ தீதான்
உயரே எழு,
மேலும் உயரே எழு!
மனமகிழ்ச்சிகாகப் பாடு
மகிழ்ச்சிகாகப் பாடு!

நாங்கள் உறுதியோடு இருக்கிறோம்
நாங்கள் சுதந்திரமாக இருக்கிறோம்
நாங்கள் அச்சமற்றவர்கள்
நாங்கள் அழிவற்றவர்கள்
ஒன்றான அனைத்தும் அழிவற்றன
அனைத்துமான ஒன்று அழிவற்றது
நீ அழிவற்றவனா? நான் அழிவற்றவனா?
அவன் அழிவற்றவனா? தீ அழிவற்றது

நீ தீயா?
நான் தீயா?
அவன் தீயா?
தீ தீதான்
உயரே எழு
மேலும் உயரே எழு!
மகிழ்ச்சிக்காகப் பாடு
மகிழ்ச்சிக்காகப் பாடு!

We sing for joy, we soar,
we soar, we sing for joy!
The one that is all sings for joy,
the all that is one sings for joy.

Is it you who sing for joy, or is it I?
Is it he who sings for joy, or is it fire?
It is joy itself that sings for joy!
It is joy itself that sings for joy!
Only joyfully singing,
only joyfully singing! Singing!

Singing!
Singing!

Draft-January 20,1920
Revised:January 3,1928

நாங்கள் மகிழ்ச்சிக்காகப் பாடுகிறோம், நாங்கள் உயரே எழுகிறோம்
நாங்கள் உயரே எழுகிறோம், நாங்கள் மகிழ்ச்சிக்காகப் பாடுகிறோம்!
ஒன்றான அனைத்தும் மகிழ்ச்சிக்காகப் பாடுகின்றன
அனைத்துமான ஒன்று மகிழ்ச்சிக்காகப் பாடுகின்றது
மகிழ்ச்சிக்காகப் பாடுவது நீயா...? நானா...?
மகிழ்ச்சிக்காகப் பாடுவது அவனா...? தீயா...?
தனக்குதானே மகிழ்ச்சியாக இருப்பது, மகிழ்ச்சிக்காகப் பாடுகிறது!
மகிழ்ச்சிக்காகப் பாடுவது, தனக்குதானே மகிழ்ச்சியாக இருக்கிறது!
மகிழ்ச்சியாக மட்டுமே பாடிக்கொண்டிருக்கிறோம்
மகிழ்ச்சியாக மட்டுமே பாடிக்கொண்டிருக்கிறோம்!
பாடிக்கொண்டிருக்கிறோம்...!
பாடிக்கொண்டிருக்கிறோம்...!
பாடிக்கொண்டிருக்கிறோம்...!

சனவரி 20, 1920

# Coal in the Grate
## - Dedicated to my native land

Ah...! my fair young maiden,
I shall not betray your care,
let you not disappoint my hopes.
For you my heart's delight
I burn to such a heat.

Ah...! my fair young maiden,
you must know of my former life.
You cannot shrink from my coarseness:
only in such a breast as mine
could burn a fire so bright.

Ah...! my fair young maiden,
certain it is that in my former life
I was a trusty pillar
buried alive for years on end:
today must I see the light of day again.

Ah...! my fair young maiden,
since I see the light of day again
I think only of my native home:
for you my heart's delight
I burn to such a heat.

January - February 1920

# உலையிலிருக்கும் நிலக்கரி
## – அர்ப்பணிப்பு என் தாய்நாட்டிற்கு

*ஆகா. . . !*
*அழகான இளம் கன்னிப்பெண்ணே...!*
*உனதன்பை உதாசினப்படுத்த மாட்டேன்*
*மனமகிழ்ச்சியுடன் உனக்காக – நான்*
*அதீத வெப்பத்துடன் எரிந்து கொண்டிருக்கின்றேன்.*

*ஆகா. . . !*
*அழகான இளம் கன்னிப்பெண்ணே. . . !*
*எனது கடந்தகால வாழ்வை அறிந்திருக்க வேண்டும்*
*எனது வலிமையைச் சுருக்கிவிட முடியாது*
*அத்தகைய நெஞ்சத்தால்தான் அந்த ஒளியை உமிழ முடியும்*

*ஆகா. . . !*
*அழகான இளம் கன்னிப்பெண்ணே. . . !*
*உண்மைதான், நம்பிக்கைக்குரிய தூணாக இருந்தேன்.*
*கடந்தகால வாழ்க்கையில் – நான்*
*உயிருடன் புதைக்கப்பட்டேன்*
*பல்லாண்டுகளின் முடிவில் – நான்*
*இன்று விடியலை மீண்டும் காணவேண்டும்*

*ஆகா. . . !*
*அழகான இளம் கன்னிப்பெண்ணே,*
*விடியலை மீண்டும் பார்த்ததிலிருந்து – நான்*
*என் நாட்டைப் பற்றி மட்டுமே சிந்திக்கின்றேன்:*
*எனது அகம் மகிழ்கின்றது – உனக்காக*
*அதீத வெப்பத்துடன் எரிகின்றேன்.*

*ஜனவரி – பிப்ரவரி 1920*

# Sunrise

Fiery clouds girdle the rim of the sky
like crimson dragons roving the air,
like crimson lions, whales, elephants, rhinoceroses.
Perhaps you are all outriders of Apollo?

And you, blazling headlights of motorcars,
you twentieth-century Apollos,
have you not changed your mount for a car?
I would be your driver, will you engage me?

Ah! The vitality of light!
Agate morning birds scatter before my eyes.
Light and dark are divided with the clean cut of
 a knife.
For light there are floating clouds, for dark
 there are floating clouds.
Both are floating clouds, why then dark, why light?
I hold my gaze on the darkness of the clouds:
all are dispersed by Apollo's potent beams.
Then I saw that the cockcrows all about me
 have a deeper meaning.

March 1920

# சூரியோதயம்

வானத்தின் விளிம்பை மேகக் கூட்டங்கள் சூழ்ந்துள்ளன
சினம்கொண்ட சிவந்த டிராகான்கள் போல்
காற்றில் சுற்றித் திரிகின்றன
டிராகான்கள், திமிங்கலங்கள், யானைகள் டைனோஸசர்கள்போல்
ஒளிக் கடவுளின் சேவகர்கள் – நாம் அனைவரும்

வாகனங்களில் ஒளிரும் முன்விளக்குகள் – நீங்கள்
இருபதாம் நூற்றாண்டின் ஒளிக் கடவுள்
உங்களுடைய பயணத்தை நீங்கள் இன்னும்
மகிழுந்திற்கு மாற்றிக்கொள்ளவில்லையா – நான்
ஓட்டுனராக இருப்பேன் உனக்கு – என்னை
ஏற்றுக் கொள்வாயா சேவகனாக?

ஆ. . . ஒளியின் மகிமையே. . . !
பறந்து செல்கின்றன பறவைகள்
எனது கண்முன்னே அதிகாலைப்பொழுதில் இரவும் பகலும்
சரிசமமாகப் பிரிக்கப்பட்டுள்ளன
கத்தியால் வெட்டியது போன்று
இரவிலும் மேகக் கூட்டங்கள்
பகலிலும் மேகக் கூட்டங்கள்
மேகக்கூட்டங்கள்தாம் இரண்டுமே – ஏன்
கருமையாகவும் வெண்மையாகவும்
கருமையான மேகக்கூட்டங்களைக்
கூர்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறேன்
ஒளிக்கடவுளின் ஒளிக்கற்றைகளால்
அவை விரட்டியடிக்கப்படுகின்றன
விடியற்காலைச் சேவல் சத்தம்
நல்ல செய்திகளைக் கொண்டுவருகின்றது.

மார்ச் 1920

# The Good Morning

I greet you with a Good Morning:
rolling ocean that knows no rest,
shimmering glow of the rosy dawn,
white clouds welling up like poetry from its source.
silken rain-threads evenly drawn (language of poetry),
crests over the sea burning with the Exe of passion,
morning breeze combing the soul!

I greet you with a Good Morning:
my youthful homeland,
my new-bom kinsfolk,
boundless reaches in southern lands of my Yangtze,
frozen wastes in northern lands of my Yellow River.
Thousand-league Great Wall,
wilderness of snow,
the Russia who inspires me with awe,
the pioneer I hold in awe!

I greet you with a Good Morning,
snow-capped Pamirs,
snow-capped Himalayas,
revered Tagore of Bengal,
fellow scholars in the school of Nature,
Ganges! Sacred light glowing on the Ganges,
Indian Ocean,Red Sea, Suez Canal,
pyramids on the banks of the Nile!

# காலை வணக்கம்

ஓய்வறியாமல் சுழலும் கடலே. . . !
கவிதைகள் போல மேலெழுகின்ற
இளஞ்சிவப்பு நிற விடியற்காலையின்
வெண்மேகக் கூட்டங்களே. . . !
துயரக் கனலில் எரிந்து கொண்டிருக்கின்ற
கடலின்மேல் போர்த்தப்பட்ட
பட்டுக் கம்பளமே. . . !
எனது ஆத்மாவை வருடிச்செல்கின்ற
காலைப்பொழுதின் தென்றலே. . . ! – உங்களை
வணக்கம் சொல்லி வரவேற்கின்றேன்.

இளமை ததும்பும் எனது தாய்மண்ணே. . . !
புதியதாகப் பிறந்த எனது குழந்தையே. . . !
தென்பகுதியின் எல்லையற்ற யங்–சி நதியே. . . !
வெண்பனி மூடிய வடப்பகுதியின் மஞ்சள் நதியே. . . !
ஆயிரம் ஆண்டு நெடுஞ்சுவரே. . . !
பரந்து விரிந்த வெண்பனியே. . . !
எனதார்வத்தைத் தூண்டும் ரஷ்யாவே. . . !
நான் பயம்கொள்ளும் முன்னோடிகளே! – உங்களை
வணக்கம் சொல்லி வரவேற்கின்றேன்.

வெண்பனி மூடிய பமிர் மலைகளே. . . !
வெண்பனி மூடிய இமயமலைகளே. . . !
மதிப்பிற்குரிய வங்காளக் கவிஞர் தாகூரே. . . !
இயற்கைப் பள்ளியின் சான்றோர்களே. . . !
புனித ஒளி வீசும் கங்கை நதியே. . . !
இந்தியப் பெருங்கடலே. . . !
செங்கடலே, சூயஸ் கால்வாயே. . . !
நைல்நதிக்கரையில் அமைந்திருக்கும் பிரமிடுகளே. . . !

Da Vinci,so early your dreams of flight,
Thinker of Rodin, seated before the Pantheon,
band of friends, half working half studying,
Belgium, people of Belgium, survivors of war,
Ireland, poets of Ireland,
Atlantic!
I greet you with a Good Morning,
Atlantic, flanked by the New World,
grave of Washington, of Lincoln, of Whitman,
Whitman! Whitman! The Pacific that was Whitman!
Pacific!
Pacific Ocean! Isles of the Pacific,ancient Fu-
    sang lying in the Pacific,
O Fusang! Fusang still Wrapped in dream.
Awake! Mesame!
Hasten to share in this millennial dawn!

January 1920

டாவின்சியின் கனவே!
ரோம் நகரச் சிந்தனையாளர்களே. . . !
நண்பர்களே. . . ! உழைப்பாளிகளே. . .! படிப்பாளிகளே. . . ! – உங்களை
வணக்கம் சொல்லி வரவேற்கின்றேன்.
பெல்ஜியமே! பெல்ஜிய மக்களே. . . !
போரில் தப்பிப் பிழைத்தவர்களே. . . !
அயர்லாந்தே, அயர்லாந்து மக்களே. . . !
அட்லாண்டிக்கே. . . ! – உங்களை
வணக்கம் சொல்லி வரவேற்கின்றேன்.
அட்லாண்டிக்கின் புதிய உலகமே. . . !
வாசிங்டனின் கல்லறையே. . . !
லிங்கனின் கல்லறையே. . . !
விட்மேனின் கல்லறையே. . .!
விட்மேனே. . .! விட்மேனே. . .!
பசிபிக்கின் விட்மேனே. . .!
பசிபிக்கே. . . !
பசிபிக் சமுத்திரமே. . . ! பசிபிக்கின் தீவுகளே. . . !
பசிபிக் சமுத்திரத்தின் கரையில் அமைந்திருக்கும்
பண்டைய சீனர்களின் புசாங் காலனியே!
வணக்கம் சொல்லி வரவேற்கின்றேன்
ஓ... புசங்! – நீ
இன்னும் கனவுகளில் போர்த்தப்பட்டிருக்கின்றாய்
எழுந்திரு! எழுந்திரு!
இந்த நூற்றாண்டின் விடியலைக்
காணத் தயங்குகின்றாயா?!

சனவரி 1920

# Panorama from Fudetate Yama

Pulse of the great city,
surge of life,
beating, panting, roaring,
spurting, flying, leaping,
the whole sky covered with a pall of smoke:
my heart is ready to leap from my mouth.

Hills, roofs, surge on,
wave after wave they well up before me.
Symphony of myriad sounds,
marriage of man and Nature .

The curve of the bay might be Cupid's bow,
man's life his arrow, shot over the sea.
Dark and misty coastline,steamers at anchor,
steamers in motion, steamers unnumbered,
funnel upon funnel bearing its black peony
Ah! Emblem of the Twentieth Century!
Stern mother of modern civilization!

June 1920

# பூடெட் யாமா மலையிலிருந்து ஒரு காட்சி

புகழ்மிக்க நகரத்தின் இதயத் துடிப்புகள்!
மக்கள் அலைகள், முரசு கொட்டல், மூச்சுத்திணறல், முழக்கம்,
அசுரவேகம், பறத்தல், பாய்ச்சல்,
வானம் முழுமையும் சோகத்தால் போர்த்தப்பட்டுள்ளது:
என் இதயம் வாய் வழியாகத்
துள்ளி வெளியே வரத் தயாராக
இருக்கின்றது.

பூமியின் மேற்கூரையும் மலைகளும்
உயரே எழுகின்றன
அடுத்தடுத்த அலைகள்
என்முன்னே உயரே எழுகின்றன
எண்ணற்ற ஓசைகளின் இசை
இயற்கைக்கும் மனிதனுக்கும் நடக்கும் திருமணம்

வங்காள விரிகுடாவின் வளைவு
அன்பின் வில்லாக இருக்கலாம்
மனித வாழ்க்கை கடலில் சுட்டு வீழ்த்தப்படுகிறது
இருண்ட பனிசூழ்ந்த கடற்கரையில்
நீராவிக் கப்பல்கள் நிறுத்தப்பட்டுள்ளன
எண்ணற்ற நீராவிக் கப்பல்கள்
கொத்துக் கொத்தாக
கருப்பு ரோசா மலர்களை ஏந்திவருகின்றன!
ஆகா. . ! இருபதாம் நூற்றாண்டின் சின்னம்
நவீன உலகத்தின் இரக்கமற்ற தாய்!

ஜூன் 1920

# Shouting on the Rim of the World

Endless tumult of angry white clouds,
sublime arctic landscape.
The mighty Pacific gathers her strength to engulf the earth,
the surging flood wells up before me:
unending destruction
unending creation
unending effort.
Ah , power , power!
Picture of power,
dance of power,
music of
    power,
    poetry of
    power,
    gamut of power!

September- October 1919

# உலகத்தின் விளிம்பில்

*சினங்கொண்ட வெண்மேகத்தின்*
*முடிவற்ற ஆரவாரம்*
*வியப்பூட்டும் ஆர்டிக் சமவெளி!*
*பூமியை விழுங்க*
*வலிமைமிக்க பசிபிக் பெருங்கடல் – தன்*
*ஆற்றலை ஒருங்கிணைக்கின்றது!*
*ஆர்ப்பரிக்கும் அலை உயர்ந்தெழுகிறது.*
*என் முன்னே!*
*முடிவற்ற அழிவு*
*முடிவற்ற ஆக்கம்*
*முடிவற்ற முயற்சி*
*ஆ..! ஆதிக்கம், ஆதிக்கம்!*
*ஆதிக்கத்தின் உருவம்*
*ஆதிக்கத்தின் நடனம்*
*ஆதிக்கத்தின் இசை*
*ஆதிக்கத்தின் கவிதை*
*ஆதிக்கத்தின் எல்லை!*

*செப்டம்பர் – அக்டோபர் 1919*

# Three Pantheists

I love our old Chuang—tzu
because I love his pantheism,
because he got a living by making straw shoes.

I love the Dutchman Spinoza
because I love his pantheism,
because he got a living by grinding lenses.

I love the Indian Kabir
because I love his pantheism,
because he got a living by knotting Fishing-nets.

# மூன்று ஆத்திகவாதிகள்

சுவாங் தாவை நேசிக்கின்றேன்
அவரின் யாவும் இறையுருவே
என்னுங் கோட்பாட்டை நேசிக்கின்றேன் – ஏனென்றால்
அவர் செருப்புத் தைப்பதன் மூலம்
தனது வாழ்க்கையை நடத்தினார்.

டச்சு நாட்டுக்காரர் ஸ்பினோசாவை நேசிக்கின்றேன்
அவரின் யாவும் இறையுருவே
என்னுங் கோட்பாட்டை நேசிக்கின்றேன் – ஏனென்றால்
அவர் கண்ணாடித் துகள்களை அரைப்பதன் மூலம்
தனது வாழ்க்கையை நடத்தினார்.

இந்தியாவின் கபீரை நேசிக்கின்றேன்
அவரின் யாவும் இறையுருவே
என்னுங் கோட்பாட்டை நேசிக்கின்றேன் – ஏனென்றால்
அவர் மீன் வலை பின்னுவதன் மூலம்
தனது வாழ்க்கையை நடத்தினார்.

# By Electric Light

## *I. Inspired by an old theme:*
## *Su Tse- ching by Lake Baikel*

The electric lights are already shining,
but why is there gloom in my heart?
I pace,a lone figure,in the city;
I think of Su Tse—ching on the shores of Lake Baikal.
I see him with his white fleece on his shoulders,
a felt turban on his head, felt shoes, felt gown,
a solitary figure in the boundless Siberian steppes,
behind him a snowy sea of sheep.
I see him at dusk in early spring,
waiting to return to the yurt,
his background the frozen waves of Lake Baikal
whose shapes mingle with the undulations of
the clouds at the horizon.
I see him moving eastwards,
far away, looking towards the south, his head raised,
his eyes charged with infinite sorrow,
and yet as though there burned a thread of hope.

# மின்சார வெளிச்சத்தில்

## அ. தொன்மத்தின் ஈர்ப்பு :
## *பைகால் ஏரிக்கரையிலுள்ள சு சே–சிங்*

*மின்சார விளக்கு*
*ஒளி வீசிக்கொண்டிருக்கின்றது*
*ஏன் என் மனத்தில் இருள்? – நகரத்தில்*
*தனிமையாக நடந்துகொண்டிருக்கின்றேன்*
*பைகால் ஏரிக் கரையிலிருக்கும்*
*சு சே–சிங்கை நினைக்கின்றேன்*
*தலைப் பாகை, மூடு காலணி, அங்கி*
*தோளில் வெள்ளை நிறக் கம்பளி*
*போர்த்தியிருக்கும் அவனை*
*மனக் கண்ணால் காண்கிறேன்*
*எல்லையற்ற சைபீரியச் சமவெளியில்*
*ஒரு தனிமையான உருவம் அவனுக்குப்*
*பின்புறம் வெள்ளை நிறக் குறியாடுகள்*
*முன் வசந்தகாலத்தின் அந்திப்பொழுதில்*
*குடிசைக்குத் திரும்பிப்போகக் காத்திருக்கும்*
*அவனைக் காண்கிறேன்*
*பைகால் ஏரியின் உறைபனிக் காற்றலைகள்*
*மேகக் கூட்டங்களுடன் இணைகின்றன*
*கிழக்குத் திசையை நோக்கி*
*நடந்து கொண்டிருக்கின்றான்*
*தலையை உயர்த்தித் தொலைவிலிருந்து*
*கிழக்குத் திசையைப் பார்க்கின்றான்*
*எண்ணற்ற துயரங்களால்*
*அவனது கண்கள் நிரம்பியுள்ளன*
*இருப்பினும் நம்பிக்கைத் தீபங்கள்*
*அவன் கண்களில் எரிந்துகொண்டிருக்கின்றன.*

## *II. Before a painting, the Shepherdess of Millet*

The electric lights are already shining,
but why is there gloom in my heart?
I imagine Su Tse-ching's thoughts turning to home.
I enter an art gallery from the street,
I enjoy the late afternoon scene of Vierwaldstatter Sea;
next I gaze on a waterfall in Californian ideal picture ,
    a picture more than ideal.
Person in the painting, surely you are a barbarian
    woman, yes a barbarian woman.
A vast emerald plain brilliant with wild flowers
unrolls before my eyes.
In it stands a woman with a crook in her hand,
at her back,homeward-bound, surges her flock of sheep.
Such must have been the scene from which Su
    Tse-ching returned:
his forsaken wife, his thriving flock.
But the eyes of the shepherdess,those eyes . . .
are they fraught with bitterness,with resentment or with despair?

## ஆ. மில்லட்டின் ஆட்டிடைச்சி ஓவியத்தின் முன்பு

மின்சார விளக்கு
ஒளி வீசிக்கொண்டிருக்கின்றது
ஏன் என் மனதில் இருள்?
குடிசைக்குத் திரும்பிக் கொண்டிருக்கும்
சு சே சிங்கின் சிந்தனை ஓட்டத்தைக்
கற்பனை செய்து பார்க்கின்றேன்
நகரத்தின் கலைக்கூடத்தில்
நான் நுழைகிறேன்
சுசர்லாந்தின் வீவல்ஸ்டேடர் ஏரியின்
அந்திப்பொழுதின் அழகை இரசிக்கின்றேன்
அடுத்துக் கலிபோர்னியாவின் நீர்வீழ்ச்சியை
உற்றுப் பார்கின்றேன்
நேர்த்தியான ஓவியம்
மிகமிக நேர்த்தியான ஓவியம்
அந்த ஓவியத்திலிருக்கும் பெண்
ஒரு காட்டுவாசிப் பெண்
ஆம்...காட்டுவாசிப் பெண்ணேதான்.
காட்டு மலர்கள் பூத்துக் குலுங்கும்
பரந்து விரிந்த பச்சைப் புல்வெளி
என் கண்முன்னே காட்சி தருகிறது
அதில் கையில் குச்சியுடன் ஒரு பெண்
அவளின் பின்னே வீட்டை நோக்கிப்
பயணிக்கும் ஆட்டு மந்தை
அந்த ஓவியம்
சு. சே. சிங்கின் காட்சியிலிருந்துதான்
அமைந்திருக்க வேண்டும்
அவனுடைய கைவிடப்பட்ட மனைவி, ஆட்டுமந்தை
ஆட்டிடைச்சியின் கண்களில்
ஏதோ சோகம் தென்படுகின்றது.

## *III . Portrait of Beethoven*

The electric lights are already shining,
but why is there gloom in my heart?
I look at the painting by Millet,
I again search throughThe World's Great Painters.
The Mother,head of Jesus, girl hugging a pitcher. . .
dance before my eyes.

Ah! Beethoven! Beethoven! You dispel my
nameless grief!
Your dishevelled hair streams like swiftly flowing waves ,
your high white collar is like a snow—capped ridge;
your leonine forehead,your tigerish eyes,
your brain which is like"the will of the Universe" itself.
In your right hand a pen, in your left a manuscript,
an angry torrent flows from the point of your pen.
Beethoven! What are you listening to?
It is as if I were hearing your Symphony.

Draft:end of 1919
Revised: February I, 1928

## இ. இசைக் கலைஞனின் மார்பளவு ஓவியம்

மின்சார விளக்கு
ஒளி வீசிக்கொண்டிருக்கின்றது
ஏன் என் மனதில் இருள்?
மில்லட்டின் ஓவியத்தை உற்று நோக்குகிறேன்
உலகப்புகழ் பெற்ற ஓவியங்களை
மீண்டும் ஆராய்கின்றேன்
தாய்சேய் ஓவியம், ஏசுவின் தலைப்பகுதி ஓவியம்,
மண்பானையைக் கட்டித் தழுவும் பெண்ணின் ஓவியம்
என் முன்னே வந்து செல்கின்றன

ஆகா. . .
இசைக்கலைஞனே. . . ! இசைக்கலைஞனே. . . ! – நீ
எனது இனம்புரியாச் சந்தேகத்தைத் தீர்த்துவை
அலைபோன்ற உனது கலைந்த தலைமுடி
வெண்பனி போன்ற சட்டை
உன்து கூர்மையான நெற்றி
வசிகரிக்கும் உனது கண்கள்
உனது வலது கையில் எழுத்தாணி
இடதுகையில் ஓலைச்சுவடி
இசைக்கலைஞனே. . . !
எதை இப்படி கேட்டுக் கொண்டிருக்கின்றாய்
இது நான் உனது இசையைக் கேட்டு
இரசிப்பது போலவே உள்ளது

– 1919

# O Earth, My Mother

O earth, my mother,
the sky is already pale with dawn;
you rouse the child in your bosom,
now I am crawling on your back.

O earth, my mother,
you sustain me as I roam through the paradisiacal garden,
and within the ocean
you give forth music that soothes my spirit.

O earth, my mother,
through past, present, future
you are food, apparel, shelter for me;
how can I repay the benefits you have bestowed upon me?

O earth, my mother,
henceforth I shall seclude myself less indoors;
in the midst of this opening up of waste lands
I would fulfil my filial duty to you.

O earth, my mother,
I am envious of your dutiful sons,the peasants
in the fields;
they are the nurse of mankind,
you have always cared for them.

# ஓ பூமித் தாயே...!

ஓ... பூமித் தாயே. . .!
விடியற்காலை வானம் வெளுத்துவிட்டது
இக்குழந்தையை உமது நெஞ்சில்
தாங்கி வளர்த்தாய்
இப்போது உமது முதுகில் – நான்
தவழ்ந்து கொண்டிருக்கிறேன்.

ஓ... பூமித் தாயே...!
இச்சொர்க்க பூங்காவிலும்
அகன்ற கடலிலும் – நான்
சுற்றித் திரியும்போது
என்னைப் பொறுத்தருளுக
எனது ஆத்மாவிற்கு அமைதிதரும்
இசையைத் தந்தருளுக.

ஓ... பூமித் தாயே...! – நீ
எனது கடந்த காலத்தின்
நிகழ்காலத்தின், எதிர்காலத்தின்
உணவு, உடை, உறைவிடம்
எனக்குச் செய்திருக்கும் நன்மைக்காக
உமக்கு எவ்வாறு
நன்றிக் கடனைச் செலுத்துவது?

ஓ... பூமித் தாயே...!
இனி அறையில்
அடைந்து கிடக்கப்போவதில்லை
இத்திறந்த புன்செய் நிலத்தின் நடுவே
எனது கடமையை ஆற்றப்போகிறேன்.

ஓ... பூமித் தாயே...!
உமது கடமைமிக்க புதல்வர்களைப்
பாடுபடும் விவசாயிகளைக் கண்டு – நான்
பொறாமை கொள்கிறேன் – அவர்கள்
மனிதயினத்தைப் பேணிக்காப்பவர்கள் – நீ
அவர்களின்மீது எப்பொழுதும்
அக்கறை கொண்டிருக்கிறாய்.

O earth, my mother,
I am envious of your darlings,workers in coalpits
they are the Prometheus of mankind,
you have always cared for them.

O earth, my mother,
I am envious of every blade or twig, my brothers, your progeny
freely, independently, contentedly, vigorously
they enjoy the life bestowed on them.

O earth, my mother,
I envy every living creature,the earthworm
most of all;
only I do not envy the birds flying in the air,
they have left you to go their way in the air.

O earth,my mother,
I do not wish to fly in the air,
nor ride in carts, on horseback,wear socks or
put on shoes,
I only Wish to go barefoot, ever closer to you.

ஓ... பூமித் தாயே...!
உமது பிரியமானவர்களை
சுரங்கத் தொழிலாளர்களைக் கண்டு – நான்
பொறாமை கொள்கிறேன் – அவர்கள்
மனிதயினத்தின் வழிகாட்டிகள் – நீ
அவர்களின்மீது எப்பொழுதும்
அக்கறை கொண்டிருக்கிறாய்.

ஓ... பூமித் தாயே...!,
தாவரங்களனைத்தும் – என்
உடன்பிறப்புகள் – உன்
வாரிசுகளைக் கண்டு – நான்
பொறாமை கொள்கிறேன்
தனிமையாக, சுதந்திரமாக
தன்னிறைவாக, சுறுசுறுப்பாக
அவைகளுக்கு அளிக்கப்பட்ட
வாழ்க்கையை வாழ்கின்றன.

ஓ... பூமித் தாயே...!
உயிரினங்களை, மண்புழு உள்பட
அனைத்தையும் கண்டு – நான்
பொறாமை கொள்கிறேன்
பறவைகளைக் கண்டு – நான்
பெருமைகொள்கிறேன்
காற்றில் அவை செல்லும் பாதையில்
உமக்கு வழிவிட்டிருக்கின்றன.

ஓ... பூமித் தாயே...!
நான் காற்றில் பறக்கவோ
மாட்டுவண்டியிலோ
குதிரைமேலோ
சவாரி செய்யவோ
காலுறை அணியவோ
மூடுகாலணி அணியவோ
ஆசைப்படவில்லை
எப்போதும் உமக்கருகில்
வெறும் காலுடன் மட்டுமே
செல்ல விரும்புகிறேன்.

O earth,my mother,
you are øitness to the reality of my existence;
I do not believe you are the mere shape of a
bubble conjured forth in a dream,
I do not believe I am merely an imbecile crea-
ture acting øithout reason.

O earth, my mother,
we are all I-yin,born out of Kungsang;
I do not believe that in the shadowy heaven above,
a certain Father exists.

O earth, my mother,
I think everything in this world are incarnations
of your body:
thunder is the breath of your might,
snow and rain the upsurge of your blood.

O earth, my mother,
I think that the lofty bowl of the sky is the mirror
in which you adorn yourself,
and that the sun by day and the moon by night
are but your reflections in the mirror.

ஓ... பூமித் தாயே...!
என்னுடைய அர்த்தமுள்ள
வாழ்க்கைக்கான சாட்சி – நீ
கனவில் தெரியும்
வெற்றுக் குமிழியென்று
நம்ப முடியவில்லை என்னால்
நானொன்றும் முட்டாள் ஜந்துவல்ல
காரணமில்லாமல் வாழ்வதற்கு.

ஓ... பூமித் தாயே...!
உமது மடியில் பூத்த
புதல்வர்கள் நாங்கள் அனைவரும்;
நம்ப முடியவில்லை என்னால்
மேலேயுள்ள துயர்மிகுந்த சொர்க்கத்தில்
நிரந்தரத் தந்தையொருவர்
இருக்கின்றாரென்று.

ஓ... பூமித் தாயே...!
இவ்வுலகிலுள்ள அனைத்தும் – உனது
திருவுருவின் அவதாரங்களென
நினைக்கின்றேன்:
மின்னல் – உனது
வலிமைமிக்க சுவாசம்
மழையும், வெண்பனியும்
பொங்கியெழும் உமது இரத்தம்.

ஓ... பூமித் தாயே...!
வானம் உமது ஒப்பனை செய்யும்
உன்னதமான கண்ணாடியென
நினைக்கிறேன்:
பகலில் சூரியனும்
இரவில் நிலவும்
உமது கண்ணாடியில் தெரியும்
எதிரொளிகள்.

O earth, my mother,
I think all the stars in the sky
are but the eyes of us your creatures reflected
        in the mirror.
I can only think you are the witness to the reality of existence.

O earth, my mother,
my former self was just an ignorant child,
I only enjoyed your affection,
I did not understand, I did not know how to repay your affection.

O earth, my mother,
henceforth I shall realize how loving you are;
If I drink a glass of water, even if it is form
        Heaven-sent dew,
I shall know it is your milk,my life - sustaining drink

O earth,my mother,
whenever I hear a voice speak or laugh
I know it is your song,
expressly provided to comfort my spirit.

ஓ... பூமித் தாயே...!,
வானத்தில் ஒளிரும் நட்சத்திரங்கள்
உமது கண்ணாடியில் எதிரொளிக்கும்
எமது கண்களென நினைக்கிறேன் – நீவிர்
உயிரினங்கள் இருத்தலுக்கான சாட்சியென்றே
என்னால் நினைக்க முடியும்.

ஓ... பூமித் தாயே...!
சிறுவயதில் – நான்
ஒன்றுமறியாக் குழந்தையாயிருந்தேன்
உமதன்பை மட்டுமே – நான்
அனுபவித்தேன்; புரிந்துகொள்ளவில்லை
எனக்குத் தெரியவில்லை
அன்பை எவ்வாறு திரும்பச் செலுத்துவதென்று.

ஓ... பூமித் தாயே...!
இனி புரிந்துகொள்வேன் – நீவிர்
எவ்வளவு அன்புமிக்கவரென்று
ஒரு கோப்பைத் தண்ணீர் குடித்தாலும்
அது சொர்க்கத்திலிருந்து அனுப்பப்பட்ட
அமிழ்தமாக இருந்தாலும் – அது
உனது பாலென்றே
நானறிவேன்–அது
எனது வாழ்க்கையைப் பேணிக்காப்பது.

ஓ... பூமித் தாயே...!
பேச்சொலியோ சிரிப்பொலியோ
எப்பொழுதெல்லாம் – நான்
கேட்கிறேனோ அப்பொழுதெல்லாம்
என்னுடைய ஆன்மாவை அமைதிப்படுத்த – நீவிர்
எனக்குத் தந்தருளும்
கீதமென்றே நானறிகிறேன்.

O earth, my mother,
before my eyes everything is in restless motion;
I know this is your dance
with which you wish to comfort my soul.

O earth, my mother,
I savour every fragrance, every colour;
I know they are palythings you have given me
expressly to comfort; my spirit.

O earth, my mother,
my spirit is your spirit;
I shall make my spirit strong
to repay your affection.

O earth, my mother,
I henceforth I shall repay your affection;
I know that you love me and Wish to encourage me to work,
I shall learn from you to work, never to stop.

December 1919

ஓ... பூமித் தாயே...!
என் விழிகளுக்கு முன்
அனைத்தும் ஓய்வின்றி
இயங்கிக் கொண்டிருக்கின்றன
இது உமது நடனமென்று
எனக்குத் தெரியும்
இதன் மூலம்
எனதாத்மாவை அமைதிப்படுத்த
விரும்புகின்றீர்.

ஓ... பூமித் தாயே...!
நிறங்கள், நறுமணங்கள்
அனைத்தையும் நுகர்கிறேன் – இவை
எனதாத்மாவை அமைதிப்படுத்த – நீவிர்
எனக்குத் தந்தருளியுள்ள
விளையாட்டுப் பொருட்கள்.

ஓ... பூமித் தாயே...!
எனதாத்மாவே உமதாத்மா
உமது அன்பைத் திரும்பச் செலுத்த
எனதாத்மாவை வளப்படுத்துவேன்.

ஓ... பூமித் தாயே...!,
இனி நான்
உமதன்பைத் திரும்பச் செலுத்துவேன்
எனக்குத் தெரியும் – நீவிர்
என்னை நேசிக்கின்றீர்
என்னை ஊக்கப்படுத்துகின்றீர்
உம்மிடமிருந்து கற்றுக்கொள்வேன்
எப்போதும் ஓய்வின்றி உழைக்க.

டிசம்பர் 1919

# Morning Snow

**- On reading Caryle's The Hero as poet**

Waves of snow.
A world all of silver.
My whole being is ready to resolve into light
    and flow forth,
an open secret.

Water dripping from the eaves ....
Surely it is my life's blood?
My life's blood drips with muted cadence,
in harmony with the waves of the sea, of the pines, of the snow.

Nature,how bold your sweep.
The symphony that is Nature.
Hero—poet.
Proletarian poet.

December 1919

# விடியற்காலையின் வெண்பனி

– கேர்லியின் ஒரு கதாநாயகன் கவிஞனாகின்றான்
எனும் கவிதையைப் படித்தவாறே

வெண்பனியின் அலைகள்!
வெள்ளியால் நிரம்பிய ஓர் உலகம்!
ஒளியில் கரைந்து முன்னோக்கி ஓட – நான்
தயாராக இருக்கிறேன்
இது உலகமறிந்த இரகசியம்.

நீர் சொட்டிக்கொண்டிருக்கின்றது...
இது என் வாழ்வாதாரம்
எனது வாழ்வாதாரம் அமைதியாகச் சொட்டுகின்றது;
கடலின் அலைகள், பைன் மரங்கள், வெண்பனி
உறவு கொள்கின்றன ஒன்றோடொன்று

இயற்கையே. . . !
உனது அசைவு எவ்வளவு அசாத்தியமானது !
உனது சிம்போனி இசை இயற்கையானது – நீ
ஒரு நாயகன் – பொதுவுடைமைக் கவிஞன்.

டிசம்பர் 1919

# Sea of Light

Unbounded Nature
has become a sea of light.
Everywhere is life in pulsing light - waves,
everywhere a new spirit in the air,
everywhere poetry,
everywhere laughter:
a laughing sea
and laughing hills,
a laughing sun
and a laughing earth,
while I and Ah-ho, my tender shoot,
laugh together in this world of laughter.

Emerald - green , a fir-tree
beckons us with a smile.
The sands, a sheet of silver leaf,
invite us laughing to their embrace.
We are here!
Hug us, then!
And in your bosom we shall bathe in light.

# கடலின் ஒளி

இயற்கையானது பறந்துவிரிந்த
ஒளிக்கடலாக மாறியுள்ளது
ஜொலிக்கும் ஒளியலைகளில்
காணுமிடமெல்லாம் ஜீவாத்மாக்கள்
வீசும் காற்றில்
காணுமிடமெல்லாம் பரமாத்மாக்கள்
காணுமிடமெல்லாம் கவிதைகள்
காணுமிடமெல்லாம் சிரிப்பலைகள்
புன்னகைக்கும் கடல்
புன்னகைக்கும் மலைகள்
புன்னகைக்கும் சூரியன்
புன்னகைக்கும் பூமி
சிறுவயதில் இப்பூவுலகில்
ஒன்றாக மகிழ்ந்திருக்கின்றோம்
நானும் எனது நண்பன் அகாவும்.

புன்னகையோடு அழைக்கின்றன
மரகதப் பச்சைநிற ஊசியிலை மரங்கள்
இன்முகத்தோடு வரவேற்கின்றன
ஊசியிலை போர்த்திய மணற் படுக்கைகள்
நாங்கள் இங்கேயே இருக்கின்றோம்!
எங்களை இப்போதே அரவணையுங்கள்!
உனது மார்பை அணைத்தவாறே
நாங்கள் ஒளியில் குளிப்போம்.

Acrowd of school children
are skipping about in the sand:
one throws a handful of sand,
another laughs back at him;
the first pushes the second one over,
the other one sends the first sprawling.
I am back in my boyhood of fifteen years ago.

Fifteen years ago
I was a boy like you.
I lived at Kiachow on the River Chingyi,
at the school nestling at the foot of Mount Chihlo.
The school that nurtured me!
The sandy yard where I played within your care -
does it still glow with its old radiance?
Ah, I had a favourite school - friend then,
I heard,alas,he died this year.

Comrade sworn to lasting friendship.
Fragile as the early Willow,
your form still lingers before my eyes.
Could your liberated spirit
still be happily laughing at my side?
When, at the parting of flesh and spirit,
you remembered your friend beyond the seas,
how many tears did you shed for him?. . .

மணற்பரப்பில் பள்ளிக்கூட மாணவர்கள்
கூட்டமாகத் துள்ளிக் குதித்தாடிக் கொண்டிருக்கிறார்கள்
ஒருவன் கை நிறைய
மணலை அள்ளி வீசுகிறான்
அவனுக்குப் பின்னே இருந்து
மற்றொருவன் சிரிக்கின்றான்
முதலாமவன் இரண்டாமவனைத் தள்ளுகிறான்
மற்றொருவன் இரண்டாமவனைத் தள்ளுகிறான்

பதினைந்து வருடங்கள் பின்னோக்கி
எனது பால்ய பருவத்தை
நினைத்துப் பார்க்கின்றேன்
பதினைந்து வருடங்களுக்கு முன்
உன்னைப் போன்று சிறுவனாயிருந்தேன்
சிங்யி நதியின் கரையின் கியச்சோ கிராமத்தில்
நான் வாழ்ந்துவந்தேன்
சிக்லோ என்ற மலையடிவாரத்தில்
பள்ளிக்கூடம் இருந்தது
அப்பள்ளிக்கூடம்தான்
என்னை வளர்த்தெடுத்தது
மணற்படுக்கை
நான் உன்னுடைய அரவணைப்பில்
எங்கு விளையாடினேனோ
அவ்விடம் அதே பளபளப்புடன் மிளிர்கிறதா?
உற்ற பள்ளித்தோழன்
ஒருவனை அப்போது பெற்றிருந்தேன் – நான்
கேள்விப்பட்டேன், பாவம்,
அவன் இறந்துவிட்டான்.

தோழர்களே என்றும் பிரியா நட்பிற்காக
சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளுங்கள்!
உங்கள் இளமை தீரும் முன்பே
உன்னுடைய உருவம் – இன்னும்
எனது கண் முன்னே
ஓடிக்கொண்டிருக்கின்றது.
பிரிந்த உனது ஆத்மாவானது – இன்னும்
என்னருகில் புன்னகைத்துக் கொண்டிருக்கின்றதா?
உனது ஜீவாத்மா பரமாத்மாவை
பிரியும் போது – நீ
உனது நண்பனை
கடலுக்கு அப்பால் நினைவு கூர்ந்தாயா?
அப்போது அவனுக்காக எத்தனை துளி
கண்ணீர் சிந்தினாய்?...

Oh, that trim little stone lighthouse
shining out over the sea.
Ah-ho wants me to go up it;
we climb up.
The hills are on fire,
silver dances on the waves,
a line of sailing - boats
seem to be slipping by in a mirror,
so seem the clouds to slip by;
and this - Why, it is the image of life itself.

Ah-ho,where is the blue sky?
He points to the azure expanse overhead.
Ah-ho, where is the earth?
He points to the islands in the sea.
Ah-ho, where is Daddy?
He points to a bird flying in the air.
Aha! So I am that flying bird!
I am that flying bird!
Watch me outfly the white clouds,
watch me race against the gleaming sails,
and see who flies the highter,
see who speeds the faster.

ஓ...! கற்களாலான கலங்கரை விளக்கு. . . !
கடலின்மேல் ஒளி
வீசிக் கொண்டிருக்கின்றது
அகா கு. . .வுக்கு நான்
அதன்மீது ஏற வேண்டும்
நாங்கள் மேலே ஏறுகிறோம்
மலைக் குன்றுகளின்மீது
தீ பற்றி எரிந்துகொண்டிருக்கின்றது
கடலலைகளின் மீது
வெள்ளி மீன்
நடனமாடிக்கொண்டிருக்கின்றது
படகுகள் வரிசையாக
பயணித்துக் கொண்டிருக்கின்றன.

அகா கு! நீல நிற வானம் எங்கே?
தலைக்குமேல் பரந்துவிரிந்த
விண்வெளியை அவன் காட்டுகிறான்
அகா கு! பூமி எங்கே?
கடலில் இருக்கும் ஒரு தீவைக் காட்டுகிறான்
அகா கு! அப்பா எங்கே?
காற்றில் பறந்துகொண்டிருக்கும்
பறவையைக் காட்டுகிறான்.
ஆகா . . .!
நானும் அந்தப் பறக்கும் பறவைதான்!
நானும் அந்தப் பறக்கும் பறவைதான்!
வெண்மேகத்துக்கு மேலே
பறந்துகொண்டிருக்கும் என்னைக் கவனி
படகுகளுக்குப் போட்டியாகப் பறந்துகொண்டிருக்கும்
என்னைக் கவனி
யார் உயரமாக
பறந்து கொண்டிருக்கின்றதென்று பார்
யார் வேகமாகப் போவதென்று பார்.

# Drunken Song Under a Flowering Plum Tree
## - Travelling in Dazaifu in Japan

Plum tree ! Plum tree !
I sing your praises! I sing your praises!
You from your innermost self
exhale your faint unearthly fragrance
and put forth your lovely flowers.
Flowers! Love!
Quintessence of the universe,
source of life!
Were spring without flowers,
life without love,
what kind of a world would it be?
Plum blossom! Plum blossom!
I sing your praises,
I sing the praises of myself,
I sing the praises of the self-expressive universe.
Is there really a you?
Is there really a me?
Is there really an antiquity?
Are there really famous places in foreign climes?
Every idol has been struck down before me?
Down! Down! Down! I would snap my vocal chords in song!

# பூத்துக் குலுங்கும் பிளம் மரத்தினடியில் குடிகாரனின் பாடல்

*பிளம் மரமே ! பிளம் மரமே! – நான்*
*உனது புகழைப் பாடுகிறேன் – நீ*
*உனது அகத்திலிருந்து*
*உமிழ்கின்றாய் நறுமணத்தை*
*பாசமிகு மலர்களைத் தருகின்றாய்*
*அன்பு மலர்கள்!*
*பிரபஞ்சத்தின் சாரம் – வாழ்க்கையின் மூலம்!*
*அன்பற்ற வாழ்க்கை*
*மலர்களற்ற வசந்தம் – எவ்வாறு*
*இவையின்றி உலகம் இருக்கும்?*
*பிளம் மலர்களே! பிளம் மலர்களே! – நான்*
*உனது புகழைப் பாடுகிறேன்*
*எனது புகழையும் பாடுகிறேன்,*
*எனது அகத்தின் புகழைப் பாடுகிறேன்.*
*உண்மையிலே இது நீயா?*
*உண்மையிலே இது நானா?*
*உண்மையிலே இது பழமையானதா?*
*இதுபோன்ற புகழ்பெற்ற இடம்*
*உலகில் வேறெங்கும் உண்டா?*
*ஒவ்வொரு உருவமும்*
*என் கண்முன்னே பேசுகின்றன*
*என் குரல்வளை வறண்டு விட்டது*
*பாடல்களால் அதிர்கிறது!*

## Pacing Through Jurimatsubara at Night

The ocean sleeps in peace.
Gaze into the distance, only a misty glow can
be seen,
not the faintest murmur of waves can be heard.
Ah, you spacious heavens, how lofty you are,
how free, how mighty, how vast and serenet!
Countless stars look down wide-eyed,
their gaze fixed on the beauty of the night.
Countless pines in Jurimatsubara
raise high their hands in silent adoration of the
heavens;
their hands tremble in awe against the sky;
every fibre of my nerves trembles in awe within me!

# இரவில் சுரிமத்சுபரா

அமைதியாக உறங்குகிறது – கடல்!
நெடுந்தொலைவு உற்றுப் பார்க்கின்றேன்
தென்படுகின்றன பனிமுட்டங்கள்
கேட்கவில்லை அலைகளின் முணுகல் சத்தம்கூட!
ஆகா. . . ! உமது அகன்ற சொர்க்கம்
எவ்வளவு தூய்மை . . . !
எவ்வளவு சுதந்திரம் . . . !
எவ்வளவு வலிமை . . . !
எவ்வளவு பரப்பு . . . !
எண்ணற்ற நட்சத்திரங்கள் கண்களை
அகலத் திறந்து கீழே பார்க்கின்றன
அவற்றின் பார்வை இரவின் அழகை
இரசித்தபடியே உள்ளது
சுரிமத்சுபராவில்
எண்ணிலடங்காப் பைன் மரங்கள்
அமைதியான சொர்க்கத்தை நோக்கி
தமது கைகளை உயர்த்துகின்றன
கைகள் நடுங்குகின்றன
என் ஒவ்வொரு நரம்பும்
பயத்தில் நடுங்குவதுபோல உள்ளன.

# I am an idolater

I am an idolater
I worship the sun
    worship mountain peaks
    worship the sea
I worship water
    worship fire
    worship volcanoes
    worship the great rivers
I worship life
    worship death
    worship light
    worship darkness
I worship Suez
    worship Panama
    worship the Great Wall
    worship the Pyramids
I worship the creative spirit
    worship strength
    worship blood
    worship the heart
I worship bombs
    worship sorrow
    worship destruction
I worship iconoclasts
    worship myself
    for I am also an iconoclast!

May - June 1920

# நான் ஓர் உருவ வழிபாட்டாளன்

நான் ஓர் உருவ வழிபாட்டாளன்
நான் சூரியனை வழிபடுகிறேன்
மலை முகடை வழிபடுகிறேன்
கடலை வழிபடுகிறேன்.
நான் நீரை வழிபடுகிறேன்
நெருப்பை வழிபடுகிறேன்
எரிமலைக் குழம்பை வழிபடுகிறேன்
புகழ்பெற்ற நதிகளை வழிபடுகிறேன்
வாழ்க்கையை வழிபடுகிறேன்
இறப்பை வழிபடுகிறேன்
வெளிச்சத்தை வழிபடுகிறேன்
இருளை வழிபடுகிறேன்.
நான் சூயஸ் கால்வாயை வழிபடுகிறேன்
பனாமாக் கால்வாயை வழிபடுகிறேன்
சீனநெடுஞ்சுவரை வழிபடுகிறேன்
பிரமிடுகளை வழிபடுகிறேன்
நான் ஆவியை வழிபடுகிறேன்
வலிமையை வழிபடுகிறேன்
இரத்தத்தை வழிபடுகிறேன்
இதயத்தை வழிபடுகிறேன்.
நான் அணுகுண்டை வழிபடுகிறேன்
துக்கத்தை வழிபடுகிறேன்
அழிவை வழிபடுகிறேன்.
நான் உருவ வழிபாட்டு
எதிர்ப்பாளர்களை வழிபடுகிறேன்
என்னையே வழிபடுகிறேன்
ஆகையால் நானும்
ஓர் உருவ வழிபாட்டு எதிர்ப்பாளன்தான்!

மே – சூன் 1920

# Hymn to the sun

Glaucous ocean, clamorous breakers
eastward running tide ,
with immense glow soon will emerge
the new- born sun.

Cloud-islands in the sea of the sky are
fire-fresh and smiling.
Oh, if only I could level every obstacle
to my view.

There it comes! There it comes!
Crystal white circlet:
endless golden threads fly from my pupils
to the sun.

Sun! Standing on the water's edge,
my back to the land,
I fix my gaze on you.
Sun! Until you have pervaded me with your
light I shall not turn away

# சூரிய துதி

நீலக் கடலில்கைகள் கிழக்கு நோக்கி
ஆர்ப்பரிக்கும் அலைகளே!
அதிகப் பிரகாசத்துடன் புதியதாகப் பிறந்த சூரியன்
விரைவில் தோன்றப் போகிறது.

வானத்தில் மேகத்தீவுகள் புன்னகைக்கின்றன
ஆ! என் பார்வையை மறைக்கும்
அனைத்துத் தடைகளையும்
நீக்க முடிந்தால்.

அதோ வருகிறது! அதோ வருகிறது!
வெண்மையான ஒளிவட்டம்
முடிவற்ற தங்க இழைகள்
என் கண்ணிலிருந்து சூரியனை
நோக்கிச் செல்கிறது.

சூரியனே!
கடற்கரையில் நின்றுகொண்டு
வைத்தகண் வாங்காமல்
நின்னையே பார்த்துக் கொண்டிருக்கின்றேன்
சூரியனே!
உனதொளி
என்னுள்ளில் இரண்டறக் கலக்கும் வரை
நான் வச்சகண் வாங்கமாட்டேன்

Sun! Shine on me for ever, do not turn away
Sun! When I remove my eyes from you, all
    round me is darkness.

Sun! Make my entire life a flow of fresh blood.
Sun! Turn all my poems into a golden foam.

Sun! The cloud-islands in the sea of my heart
    are fire-fresh and smiling.
Sun! Hearken ever to the angry surge of my
    heart.

சூரியனே!
எப்போதும் என்மீது ஒளியே
வீசிக்கொண்டேயிரு
சூரியனே!
என் பார்வையே உன்னிலிருந்து
விலக்கிக் கொண்டால் என்னைச் சுற்றி
இருள் கவ்விக்கொள்கிறது.

சூரியனே!
என் உடம்பில் எப்பொழுதும்
புதிய உதிரத்தை ஓடச்செய்
சூரியனே!
என் கவிதை வரிகளைத்
தங்கக் குமிழ்களாக மாற்று

சூரியனே!
என் இதயத்திலுள்ள கருமேகத் தீவுகள்
புன்னகைக்கின்றன.
சூரியனே!
என் மனதிலிருக்கும் கோபக் கனலலைமேல்
எப்போதும் கவனம் செலுத்து.

# Footprints in the Sand

## I

The sun shines from my right,
casts the full shadow of my body
on the sea to my left.
The sandy beach holds many footprints of mine .

## II

The sun shines from my left,
casts the full shadow of my body
on the sea to my right.
The sandy beach holds many footprints of mine .

## III

The sun shines at my back,
casts the full shadow of my body
on the sea in front of me.
Do not, O Sea, scour away my prints from the sand!

## IV

The sun shines in front of me.
Sun, have you cast my full shadow
on the sea at my back?
Ah, the tide has long since washed away the
footprints in the sand!

# மணற்பரப்பில் பதித்த கால்சுவடுகள்

## அ

சூரியன் ஒளிர்கிறது என் வலதுபக்கத்திலிருந்து
என் உருவத்தின் நிழலைப் படரவைக்கிறது
கடலின்மேல் என் இடதுபக்கத்தில் முழுமையாகக்
கடற்கரையின் மணற்பரப்பு— என்
கால்சுவடுகளைப் பதித்து வைத்திருக்கிறது.

## ஆ

சூரியன் ஒளிர்கிறது என் இடது பக்கத்திலிருந்து
என் உருவத்தின் நிழலைப் படரவைக்கிறது
கடலின்மேல் என் வலதுபக்கத்தில் முழுமையாகக்
கடற்கரையின் மணற்பரப்பு— என்
கால்சுவடுகளைப் பதித்து வைத்திருக்கிறது.

## இ

சூரியன் ஒளிர்கிறது என் முதுகுப்பக்கத்திலிருந்து
என் உருவத்தின் நிழலைப் படரவைக்கிறது
கடலின்மேல் என் முன்பக்கத்தில் முழுமையாக
ஏய் கடலே. . .! என் கால்சுவடுளை
மணற்பரப்பிலிருந்து அழித்துவிடாதே!

## ஈ

சூரியன் ஒளிர்கிறது என் முன் பக்கத்திலிருந்து
சூடிரியனே. . . ! என் உருவத்தின் நிழலைப் படரவைத்திருக்கிறாயா
கடலின்மேல் என் பின்னேயும் முழுமையாக?
ஐயோ. . . ! வெகு நாட்களுக்கு முன்பே கடலலை
என் கால்சுவடுகளை அழித்துவிட்டிருக்கிறதே!

# Pyramids

## I

First one, then two, then three pyramid peaks
range on the banks of the Nile - are these not
the Nile banks?
One high, one lower, the last lowest of all.
The river banks below run on neat as a knife cut.

Ah, those ripples in the river's flow, those rosy
clouds surging behind the pyramids!
A white blur of light shows through the clouds:
it must be the westering sun;
the sun has traversed the eastern hemisphere, it
will now visit the western.
The natural and man-made beauties must all
have passed before your gaze .

No! No! Not So! It is the earth that is turning
and circling you
like a dancing girl approaching you
Sun! Symbol of the sun! Pyramids!
Oh, what I might follow you in your course, fly towards you!

# பிரமிடுகள்

## அ

ஒன்று, இரண்டு, மூன்று பிரமிடுகளின் முகடுகள்
நைல் நதிக்கரையில் தென்படுகின்றன
இதுதான் நைல் நதிக்கரை இல்லையா?

ஒன்று மிகவும் உயரமானது
மற்றொன்று அதைவிட உயரம் குறைவானது
மூன்றாவது இரண்டையும்விட உயரம் குறைவானது
கத்தியால் வெட்டியதுபோல
அதனருகில் அமைந்த – நைல் நதி.

ஆகா. . . !
நைல் நதியின் அலைகள்
இளஞ்சிவப்பு மேகக் கூட்டங்கள்
பிரமிடுகளின் பின்புறம் மோதுகின்றன!

மேகக்கூட்டங்களின் வழியாக
வெண்மையான ஒளிக்கதிர்கள் வீசுகின்றன
இது சூரிய அஸ்தமனமாக இருக்கும்
பூகோளத்தின் கிழக்கு மையத்திலிருந்து
மேற்கு நோக்கிச் செல்கிறது – சூரியன்.

இயற்கையழகுகளும்
மனிதன் உருவாக்கிய
அழகுகளும் உன் கண்முன்னே
கடந்து சென்றிருக்கும்.

இல்லை! இல்லை! இல்லை! அப்படி இல்லை?
பூமிதான் உன்னைச் சுற்றிச் சுற்றி வருகிறது
ஒரு நடன நங்கையைப் போல.

ஓ. . . !
உன்னைப் பின்தொடர்ந்து வரவேண்டும் – நான்
உன்னை நோக்கிப் பறந்துவரவேண்டும்!

## II

On either side runs a line of sombre woods:
between them flows a Z-shaped ribbon,
flowing towards the foot of the cloud-lapped pyramids .
Majestic solitude, deathly silence.
The points of all three pyramids
seem at the same time to be proclaiming in sonorous voices:
Create! Create ! Create with all your might!
The creative forces of man can rival those of the gods.
If you will not believe, look upon us, we grandiose structures!
Even the sun in the sky must bow his head to us!
Sonorous thunder, I am grateful for this your self-tested advice.
The surging feelings in the sea of my heart have
converged into a river that flows towards you.
Surely that Z-shaped river in the woods must be me myself?

June - July 1920

# ஆ

இருமருங்கிலும்
அடர்ந்த மரங்கள்
மரங்களுக்கு இடையில்
நைல் நதி
மேகத்தின் மடியில்
வீற்றிருக்கும் பிரமிடுகளின் பாதங்களை
நோக்கி ஓடுகின்றன
தனிமை, மயான அமைதி
மூன்று மிரமிடுகளும்
ஒரு சேர
உரக்க முழக்கமிடுகின்றன:
உருவாக்கு!
உருவாக்கு!
உருவாக்கு!
உன் சக்திகளை
ஒன்றிணைத்து!
மனிதனின்
உருவாக்க சக்தியானது
கடவுளையும்
மிஞ்சிவிடும்.

ஜூன் – ஜூலை 1920

# Victorious in Death

( Terence MacSwiney, the Sinn Feiner, a leader of the Irish Republican Army, was arrested by the British Government in the middle of August 1920 and imprisoned in Parkstone Jail. For seventy-three days he disdained to eat the English bread and died there on October 25. )

## I

*Oh ! Once again to Freedom's cause return,*
*The patriot Tell-the Bruce of Bannockburn!*

Thomas Cambell

True depiction of "the sea of tears,
gaunt forbidding pile: can it be the gateway to a
prison, or the outside of a church?
Acountless throng of young men kneel at prayer.

“MacSwiney,leader of the Irish Republican Army,
cast into Pukstone Gaol fifty days ago and more
has spurned ever since the shameful English bread
We sons of Ireland,kneeling before this great building,
are deeply moved by his devotion.
We offer up our prayers for his protection.”

Honoured MacSwiney!
Dear sons of Ireland,
the spirit of freedom will ever stand by you,
for you stand by one another,
you are the incarnation of freedom!

October 13

# வீரமரணம்

*(ஐரிஸ் குடியரசின் ராணுவத் தளபதி டெர்ரென்ஸ் மக்ஸ்வினி ஆங்கிலேய அரசால் ஆகஸ்ட் மாதம் 1920 ஆண்டு கைது செய்யப்பட்டுப் பார்க் ஸ்டோன் சிறையில் அடைக்கப்பட்டார். எழுபத்து ஏழு நாள்கள் ஆங்கிலேயர்களின் ரொட்டித் துண்டை உண்ண மறுத்து அக்டோபர் 25ஆம் நாளன்று மரணமடைந்தார்.)*

**அ**

*ஓ...! பென்னக்பர்ன் சுதந்திரப்போராட்ட வீரர் புருசை*
*நினைவுக்கூருங்கள் மீண்டும் சுதந்திரம் மலர*

– தாமஸ் காம்பெல்

வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத
துயர்மிகு இளைஞர்களின் கூட்டம்:
இது சிறைச்சாலையின் நுழைவாயிலா
அல்லது தேவாலயத்தின் முன்பகுதியா?
எண்ணிக்கையிலடங்கா இளைஞர்கள்
மண்டியிட்டுப் பிரார்த்திக்கின்றனர்.

மக்ஸ்வினி, ஐரிஸ் குடியரசின் இராணுவத் தளபதி,
பதினைந்து நாள்களுக்கு மேலாக
பார்க் ஸ்டோன் சிறைச்சாலையில்
அடைக்கப்பட்டிருக்கின்றார்
வெட்கங்கெட்ட ஆங்கிலேயர்களின்
ரொட்டித்துண்டுகளை அன்றிலிருந்தே
உண்ண மறுத்து வருகின்றார்
ஐரிஸ் குடியரசின் புதல்வர்களாகிய நாங்கள்
இப்பெரிய கட்டடத்தின் முன் மண்டியிட்டுள்ளோம்
அவருடைய அர்ப்பணிப்பு – எங்களை
மெய்சிலிர்க்க வைக்கின்றது
அவருடைய உடல்நலத்திற்காக
நாங்கள் பிரார்த்திக்கின்றோம்.

மதிப்பிற்குரிய மக்ஸ்வினி அவர்களே!
அன்பிற்குரிய ஐரிஸ் புதல்வர்களே!
சுதந்திர ஆன்மா – உங்களை
எப்போதும் ஆதரிக்கும் – உங்களுக்காக
நாங்கள் அனைவரும் காத்திருக்கின்றோம்
சுதந்திரத்தின் மறுபிறவிகள்– நீங்கள்!

(அக்டோபர் 13)

## II

*Hope, for a season, bade the world fanoell,*

*And Freedom shrieked-as Kosciusko fell!*

- Thomas Cambell

Terence MacSwiney, Irish patriot!
Today is the 22nd of October!
*(Never has the calendar on the wall so fixed my attention!)*
Are you still alive, locked in your prison cell?
Came a cable of the 17th from London:
It was sixty-six days since your fast began,
and yet you bear yourself as well as ever.
You talked for a while with your dear ones on
the afternoon of the 17th,
and your face was even more radiant than before.
Your strength was failing daily...
and today is the 22nd of October.
Irish patriot, Terence MacSwiney!
Can you still be counted among living creatures?
A cable of the 17th from your native Cork
told that a Sinn Feiner, comrade of yours, Fitzgerald,
fasted for sixty-eight days in Cork City Gaol,
and suddenly died at sundown on the 17th.
Cruel deaths there are in history, but few sotragic.
The Shouyang Mountain of Ireland! The Po-yl
and Shu-chi of Ireland!
The next cable I dread to read...

October 22

# ஆ

நல்ல தருணத்திற்காகக் காத்திருப்போம் உலகம் முழுவதுமே
சுதந்திர விழாவைக் கொண்டாடுவோம்- கொசிஸ்கொ சொன்னதுபோல.
—தாமஸ் காம்பெல்.

மக்ஸ்வினி, ஐரிஸ் சுதந்திரப் போராளியே!,
இன்று அக்டோபர் 22!
**(சுவரில் மாட்டப்பட்ட நாட்காட்டி எனது கவனத்தை எப்போதுமே ஈர்த்ததில்லை!)**
பூட்டப்பட்ட சிறைக்குள்ளே – நீர்
இன்னும் உயிருடன்தான் இருக்கின்றீரா?

இலண்டன் ஊடகம் ஒன்று அக்டோபர் 17–ம் தேதி கதைக்கின்றது:
நீர் உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கி
இன்றோடு அறுபத்தி ஆறு நாள்களென்றும்,
இன்னும் வழக்கம்போலவே தென்படுகிறாய்யென்றும்,
17ஆம் தேதி மாலை சிறிது நேரம்– உறவினர்களுடன்
பேசினாய்யென்றும்,
வழக்கத்துக்கு மாறாக உனது முகம் இன்று
பிரகாசமாக உள்ளதென்றும்.

நாள்தோறும் உனதுடல்
பலவீனமடைந்து வருகின்றதா?
இன்று அக்டோபர் 22.
இன்னும் இருக்கின்றீரா – நீர்
உயிருள்ளவர்களின் பட்டியலில்?!

உனது சொந்த மண்ணிலிருந்து
ஊடகம் ஒன்று சொல்கிறது:
உங்கள் தோழர், இராணுவத் தளபதி,
கடந்த அறுபத்தி எட்டு நாள்களாக
சிறைச்சாலையில் உண்ணாநிலையிலிருந்து,
திடீரென்று 17ஆம் தேதி மாலை
நம்மையெல்லாம் விட்டுப் பிரிந்தார் என்று
கொடூரமான சாவுகள் வரலாறெங்கும் நிகழ்ந்துள்ளன,
அவற்றில் சோகமான சாவுகளும் சில
அயர்லாந்தின் சௌயாங் மலை !
அயர்லாந்தின் போ–யி மற்றும் . . . !
அதற்குமேல் என்னால் கேட்கமுடியவில்லை

(அக்டோபர் 22)

# III

*O sacred Truth! Thy triumph ceased a while,*
*And Hope, thy sister, ceased with thee to smile.*

Thomas Cambell

Now arrives a cable of the 21st:
Three times MacSwiney has fainted.
His sister has sent a telegram to his friends,
hoping that the citizens have offered prayers for her brother.
She prays that he may die the sooner, and his agony be ended.
Who could bear to read to the end these heart-breaking words?
Who could restrain his tears?
Bestial murderous government, are you bent on
casting an irsdelible stain on the history of the world?
Cruel, callous Englishmen, has the blood of Byron and Campbell
ceased to flow in your veins?
Lustreless moon, would that our sombre earth
might on the instant be turned like you to ice!

October 24

# IV

*Truth shall restore the light by Nature given,*
*And, like Prometheus , bring the fire of Heaven!*

Thomas Cambell

The mighty ocean is sobbing its sad lament,
the boundless abyss of the sky is red with weeping,
far, far away the sun has sunk in the west.
Brave, tragic death! Death in a blaze of glory!

இ

*ஓ... தியாகியே!*
*அவர்களின் ஆணவம் ஒருநாள் அடங்குமென்று நம்புகிறேன்*
*உங்கள் சகோதரி அவர்களின் கொட்டத்தை அடக்குவாள்.*

*–தாமஸ் காம்பெல்.*

21–ம் தேதி ஊடகம் ஒன்று சொல்கிறது:
மக்ஸ்வினி மூன்று முறை மயங்கி விழுந்தார்
அவருடைய சகோதரி அவரின் நண்பர்களுக்குத்
தந்தி அனுப்பியிருக்கின்றாள்
குடிமக்கள் அவரின் நலம்நாடி
பிரார்த்தனை செய்திருக்கின்றார்கள்
நான் எண்ணுகின்றேன்
நம்மையெல்லம் விட்டுப் பிரிந்து
விரைவில் சென்றுவிடு வாரென்று
யாரால் இத்துயரமிகு வார்த்தைகளை படிக்கமுடியும்?
யாரால் இச்சோகக் கண்ணீரைத் துடைக்கமுடியும்?
கொலைக்கார அரசாங்கம் உலக வரலாற்றில்
கழுவ முடியாத இரத்தக் கறையை
எற்படுத்திக் கொண்டிருக்கின்றது;
இரக்கமற்ற கருணையற்ற
ஆங்கிலேய அரசு.

அக்டோபர் 24

ஃ

*உண்மை ஒருநாள் வெளிப்படும் வீரர்கள் சொர்க்கத்திலிருந்து*
*தீபத்தை ஏந்தி வருவார்கள்*

*–தாமஸ் காம்பெல்.*

வலிமை பொருந்திய கடல்
தேம்பித் தேம்பி அழுது கொண்டிருக்கின்றது
எல்லையற்ற வானம் அழுது அழுது
சிவந்துபோய் உள்ளது.
சூரியன் நெடுந்தொலைவில்
மேற்குத் திசையில் மூழ்கிவிட்டது
சோகமயமான வீரமரணம்!
அற்பணிப்புத் தீயில்
நிகழ்ந்த மரணம்!

Triumphal procession of a victor! Victorious death!
    Impartial God of Death! I am grateful to you!
You have saved the MacSwiney for whom my love
    and reverence know no bounds!

MacSwiney, fighter for freedom, you have
shown how great can be the power of the human will!
I am greatful to you, I extol you : freedom can
    henceforth never die!
The night has closed down on us, but how bright is the moon

October 27

In these four stanzas were crystallized the hot tears shed by me duning those days. At the head of each stanza are lines quoted from the Downfall of Poland of the Scottish poet, Thomas Campbell (1777 - 1844). They may be read in conjunction with "The Glory That Was Greece" form Don Juan, and "Fair Greece! Sad Relic from Childe Harold of Byron. Byron fought for an independent Greece; the struggle ended in defeat in which Byron died. Campbell gave money many times to aid Poland. The two poets rival each other in nobility of spirit Poland and Greece are now reborn, and Byron and Campbell are no longer living, but there is a second Poland in the West and a second Greece in the East. May the spirit of Byron and Campbell "Once again to Freedom's cause return!"

ஒரு வெற்றியாளனின்
வீர மரணம்! வீர ஊர்வலம்!
எமதர்மராசாவே..! நான் உனக்கு
நன்றிக்கடன் பட்டவன் – நான்
எல்லையற்ற அன்பும் மரியாதையும் – யார்மீது
வைத்திருக்கிறேனோ அவரை – நீ
தடுத்தாட் கொண்டிருக்கின்றாய்.

மக்ஸ்வினி, சுதந்திரப் போராளியே. . .!
மனித மனம் எவ்வளவு வலிமை பொருந்தியது
என்பதை எமக்கெல்லாம் அறியவைத்துள்ளீர்!
நான் உனக்கு நன்றிக்கடன் பட்டவன்!
நான் உன்னை வணங்குகிறேன்!
சுதந்திரத்திற்கு இனி எப்போதும் மரணமில்லை!
இருள் எம்மைச் சூழ்ந்து கொண்டது!
ஆனால், இந்த நிலவு
எவ்வளவு பிரகாசமாக உள்ளது...!

(அக்டோபர் 27)

இந்தக் கவிதை அந்நாள்களில் கண்ணீர் மல்க என்னால் எழுதப்பட்டவை. ஒவ்வொரு பத்தியின் துவக்கத்திலும் ஸ்காட்லாந் கவிஞர் தாமஸ் காம்பெல் (1777–1844) அவர்களின் கவிதை வரிகளை மேற்கோளாகக் காட்டியுள்ளேன். போலந்து நாட்டின் போராட்டத்திற்காக உதவி புரிந்த கவிஞர் காம்பெல்லுடன் கிரீன்லாந்து நாட்டின் சுதந்திரத்திற்காக போரடிய பைரான் அவர்களையும் இணைத்துப் பார்க்க வேண்டும். இரு கவிஞர்களுமே சுயமரியாதைக்காகப் போராடியவர்கள். அவர்கள் இருவரும் நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார்கள். ஆனாலும், புதிய சுதந்திரப் போலந்தும் கிரீன்லாந்தும் பிறந்தன.

# Venus

I would compare your enchanting lips
to a wine-cup.
I would be intoxicated thine without number
from its inexhaustible nectar.

I would compare your breasts
to two grave mounds.
Were we two to sleep in these graves
our blood would change to sweet dew.

1919

## தேவதை

அழகிய – உன்
இதழ்களை மதுக்கோப்பையோடு
ஒப்பிடுகிறேன்
என்றுமே தீராத – உன்
தேனமுதால் – நான்
எண்ணற்ற தடவை
போதையுற்றிருக்கின்றேன்.

உன் கொங்கைகளை
இரண்டு மலைகளுடன்
ஒப்பிடுகின்றேன்
நாம் இருவரும்
துகிலும் கல்லறையிலும்
நம் உதிரம்
சுவைமிகு தேனாக மாறுமோ. . .!

1919

## Parting

The curved arc of the waning moon
hangs yet in the sky.
The red dise of the sun
has long emerged from the east.
I went to see her off,
went on the bridge over Asahigawa River.
The current below sang its sad song,
My soul responded,
sang to me this song:

Moon!
You are like a golden comb.
I would like to climb up to the sky,
pluck you down,
and with my hand
I would set you in her hair

Oh my dear!
The sky is so far away.
how could I climb up there?
Then sky is so far away.
but even if I could climb up there,
O, my love,
where are you now?

# பிரிவு

பிறை நிலவு
மிதந்து கொண்டிருக்கிறது – விண்ணில் இன்னும்
சிவப்புநிறச் சூரியன் உதயமாகிவிட்டது
நீண்ட நேரத்திற்கு முன்பே
என்னவளை வழியனுப்ப அகிகவா நதிப்
பாலத்தின்மேல் சென்றேன்
பாலத்தின் அடியில் நதி நீர் – தனது
சோககீதத்தைப் பாடிக் கொண்டிருந்தது
எனதாத்மா ஏங்கியது – எனக்காக
இப் பாடலைப் பாடென்று.

வெண்ணிலவே...! – நீ
தங்கச் சீப்பைப்போல இருக்கின்றாய் – நான்
விண்ணிற்கு ஏறிவர
ஆசைப்படுகிறேன்
உன்னைப் பறித்துவந்து
என்னவளின் கூந்தலில் எனது கையால்
உன்னைச் சூட ஆசைப்படுகிறேன்.

என்னவளே. . .! – வானம்
நெடுந்தொலைவில் உள்ளது – நான்
எப்படி ஏறிவர முடியும்
வானம் நெடுந்தொலைவில் இருந்தாலும் என்னால்
ஏற முடியும்
ஓ. . . என் காதலியே
எங்கே இருக்கின்றாய் இப்போது?

Sun!
You are laurels for a poet.
I would like to climb up to the sky,
to take hold of you,
and with her hands
place you on my head .

O, my dear!
The sky is so far away,
how could I ever climb up there?
The sky is so far away,
but even if I could climb up there,
O, my love,
where are you now?

The curved arc of the waning moon
hangs yet in the sky.
The red disc of the sun
has long emerged from the east.
I went to see her off,
went on the birdge over Asahigawa River
The current below sang its sad song.
My soul responded,
sang to me this song.

March - April 1919

சூரியனே. . .! – நீ
கவிஞர்களுக்கென வெகுமதி –நான்
விண்ணில் ஏறிவர ஆசைப்படுகிறேன்
உன்னை எனது கைகளால் பிடித்து
என்னவளின் கைகளால் – உன்னை
என் தலைமீது வைத்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்

என்னவளே. . .! – வானம்
நெடுந்தொலைவில் உள்ளது – நான்
எப்படி ஏறிவர முடியும்
நெடுந்தொலைவில் உள்ளது – வானம்
ஏற முடிந்தாலும்,
ஓ. . . என் காதலியே
எங்கே இருக்கின்றாய் இப்போது?

பிறை நிலவு
இன்னும் விண்ணில் மிதந்து கொண்டிருக்கிறது
சிவப்புநிறச் சூரியன்
நீண்ட நேரத்திற்கு முன்பே உதயமாகிவிட்டது
என்னவளை வழியனுப்ப
அகிகவா நதிப்
பாலத்திற்குச் சென்றேன்
பாலத்தின் அடியில் நதிநீர் – தனது
சோககீதத்தைப் பாடிக்கொண்டிருந்தது
எனதாத்மா ஏங்கியது – எனக்காக
இந்தப் பாடலைப் பாடென்று.

மார்ச் – ஏப்ரல் 1919

# Spring Sadness

Is it that melacholy is clouding my mind
Or is it the desolate bleakness of the sky
How is it that the spring sunlight
is so and bereft of brilliance?
Why do the hills on yonder shore
bow their beads in frowning dejection?
The air is filled with the beat of the waves on the shore.

O sea! to whom are you speaking?
But I can make nothing of the words of the sea,
for me the flight of the white clouds has no meaning.

March - April 1919

# வசந்தகாலத் துயரம்

துயரத்தின் இருள் – என் மனதைக்
கவ்விக்கொண்டதா? – இல்லை
இது வானத்தின் தோற்றமா?
வசந்தகாலச் சூரிய ஒளி
மங்கலாக இருக்கின்றதா?
நெடுந்தொலைவிலிருக்கும்
கடற்கரைக் குன்றுகள் சோகத்தால் – ஏன்
தலையைக் குனிந்துகொண்டிருக்கின்றன?
கடற்கரைக்காற்று அலையின் ஓசையால்
நிரம்பிக் கிடக்கின்றது.

ஓ கடலே!
நீ யாருக்காகப் பேசிக்கொண்டிருக்கின்றாய்
எனக்கு ஒன்றும் விளங்கவில்லை
வெண்மேகத்தின் சிறகுகள்
எவ்விதப் பொருண்மையையும்
கொண்டிருக்கவில்லை என்று
எனக்குத் தோன்றுகிறது.

மார்ச் – ஏப்ரல் 1919

# New Moon and White Clouds

Moon! You are like a gilded sickle
You have felled the fir-trees on this sea,
yes, and I too have been felled by you!

White clouds! Are you, I wonder, cool ice to slake the thirst?
Oh that I could swallow you down my throat
and quench the fires that rage in my breast!

Written between summer and autumn, 1919

## பிறை நிலவும் வெண்மேகக் கூட்டங்களும்

*பிறைநிலவே! – நீ*
*அரிவாள் போன்று இருக்கின்றாய்*
*பசுமரங்களைக் கடலில் வீசினாய் – ஆம்*
*நானும் உன்னால் வீசப்பட்டேன்!*

*வெண்மேகங்களே!*
*உறைநீராகிய நீயா*
*தாகத்தைத் தணிக்கின்றாய்?*
*ஆகா. . . ! – என்*
*இதயத்தில் கனன்று கொண்டிருக்கும்*
*தீப்பிழம்பைத் தணிய வைக்க – நான்*
*விழுங்குகின்றேன் உன்னை!*

1919

# Egret

Egret! Egret!
Where have you flown from,
where are you flying to?
You describe an ellipse against the sky,
then in an instant you swoop down to the sea.
Again you fly up into the sky,
then again you swoop down to the sea,
yet again you fly up into mid-air.
Snowy-white egret!
Where can you be flying to?

Written between summer and autumn, 1919

# கொக்கு

*கொக்கே ! கொக்கே!*
*எங்கே பறந்து வந்தாய்?*
*எங்கே பறந்து செல்கிறாய்?*
*வானத்தில் வட்டமிட்டுக் காட்டு*
*ஒரே நொடியில் கடலில்*
*தலைகீழாகப் பாய்ந்துசெல்*
*மீண்டும் வானத்தில்*
*உயரே பறந்துசெல்*
*பனிபோன்ற வெண்மைநிறக் கொக்கே!*
*வேறு எங்கெல்லாம் – உன்னால்*
*பறந்து செல்ல முடியும்?*

*1919*

# Spring Silkworms

Silkworms, you are spinning silk . . .
No,it is poetry you are spinning!
How gossamer your poetry,how charming,how
    delicate, how pure , how sparkling,
how very . . . why I can find no words to describe you!

Silkworms, your poetry -
is it premeditated or unprompted?
Do you create with art, or is it a natural flow?
Do you make it for others,
or for yourselves alone?.

Silkworms,I am afraid that your poetry
is, alas, spontaneous,
is, alas, a natural flow .
The Palace of Art you are erecting,
is, alas, for yourselves alone.

November 23, 1920

# வசந்த காலப் பட்டுப்புழுக்கள்

*பட்டுப்புழுக்களே. . .! – நீங்கள்*
*பின்னிக்கொண்டிருப்பது பட்டா? – இல்லை*
*கவிதைகள்..! உங்கள் கவிதைகள்*
*எவ்வளவு மென்மையாகவுள்ளன!*
*எவ்வளவு வசீகரம், எவ்வளவு நேர்த்தி*
*எவ்வளவு தூய்மை*
*எவ்வளவு. . .!*
*உங்களை வர்ணிப்பதற்கு*
*வார்த்தைகள் கிடைக்கவில்லையே – ஏன் ?!*

*பட்டுப்புழுக்களே. . .! – உங்கள் கவிதைகள்*
*முன்னரே தீர்மானிக்கப்பட்டவையா. . .? இயல்பானவையா?*
*கலைநயத்துடன் படைக்கின்றீரா. . .?*
*இயற்கையின் ஓட்டமா? – இதை*
*அடுத்தவர்களுக்காகப் படைக்கின்றீரர்களா . . .?*
*உங்களுக்காகவே படைக்கின்றீர்களா ?*

*பட்டுப்புழுக்களே. . .! – எனக்கு*
*ஆச்சரியமாக இருக்கிறது*
*ஆகா. . .!*
*உங்கள் கவிதைகள் இயல்பானவைதாம்*
*ஆகா. . .!*
*உங்கள் கவிதைகள் இயற்கையானவைதாம்*
*ஆகா. . .!*
*நீங்கள் எழுப்பிக்கொண்டிருக்கும்*
*கலைநயமிக்க அரண்மனை*
*உங்களுக்காக மட்டும்தான்!*

*நவம்பர் 23, 1920*

# Night Song of a Misanthropist

Boundless sea of the sky!
Quicksilver bubble!
Above, the clear flow of the River of Stars,
below, the molten crystal of the surge.
Now is the time when all living things sleep.
Alone, cloaked in the plumes of the white peacock,
far away, far away fleeting,
I raise my head in an ivory skiff.
Not for me to ape the chiao jen, weeping pearls for tears,
to return to the sombre depths and by these tears eke out a life,
No! Rather in this dim silvery radiance,
like the fallen star,
trail my evanescent glory,
plunge deep down to Eternity.
Forward!.. Forward!
Let me not disappoint the moon before me!

November 23, 1920

# அவநம்பிக்கை கொண்டவனின்
# இரவுக் காணாப் பாடல்

*பரந்து விரிந்த பிரபஞ்சம்!*
*வெண்மையான குமிழ்*
*மேலே நட்சத்திரக் கூட்டங்கள்*
*கீழே காற்றடைக்கப்பட்ட பை*
*உயிரினங்கள் அனைத்தும்*
*உறங்கும் நேரம்*
*தன்னந்தனியே*
*வெள்ளை இறகால்*
*போர்த்தப்பட்ட மயில்*
*தொலைவில் சற்றுத் தொலைவில்*
*ஆடிக்கொண்டிருக்கின்றது*
*படகிலிலுந்து எனது தலையைச்*
*சற்றே உயர்த்திப் பார்க்கின்றேன்*
*எனக்காக அல்ல சியா சென்னுக்காக*
*கண்ணீருக்குப் பதிலாக முத்துக்களைச் சிந்துகின்றேன்*
*ஆழ்ந்த துக்கத்திலிருந்து வெளியே வர*
*இந்தக் கண்ணீர் கடின முயற்சிச் செய்கின்றது*
*மங்கலான வெள்ளிநிறக் கதிர்களில்*
*விழுந்த நட்சத்திரங்களைப் போன்று*
*மங்கிக்கொண்டிருக்கும் எனது புகழை*
*இந்த ஆழ்கடலில் மூழ்கடி*
*முன்னே வா. . .! முன்னே வா. . .!*
*என் முன்னே அந்த நிலவை*
*ஏமாற்றமடையச் செய்ய வேண்டாம்.*

*நவம்பர் 23, 1920*

# Moonlight After Rain

Wanly your glimmer
bathes the woods by the sea
the lonely depths of the woods
drip still with the frest rain of twilight

Pearly face of the poplar avenue
You lead onwards before me in your level
sweep,
guide me to the silent shore
Wafts of secret fragrance caress me

A slight chill comes over me:
you wrapped in those layers of cloudy raiment,
you, whose sphere is faultlessly round,
lend me, I pray you, of your pure silk garments

I have no sleep in my eyes :
You who delight to swathe yourself in misty
draperies,
you silent abysmal silver ocean
attune to me the secret music of your waves

# மழைக்குப் பிறகு நிலவொளி

உனதொளியால் – மங்கலான
கடற்கரைச் சோலைவனங்களைக்
குளிப்பாட்டிக் கொண்டிருக்கின்றாய்!
அமைதியான சோலைவனங்களை
உனது புத்தொளியால்
நனைத்துக் கொண்டிருக்கின்றாய் – இன்னும்

வெண்ணிற
நெட்டிலிங்க மரக்காட்டில்
எனக்குமுன் சென்று
அமைதிக் கடற்கரைக்கு வழிகாட்டு
நறுமணங்கள் என்னை வருடிச்செல்கின்றன

இதமான சில்லென்ற காற்று
என்மீது படர்கிறது:
மேகப்போர்வையால் – நீ
போர்த்தப்பட்டிருகின்றாய்
உனது உருவம்
எவ்விதப் பின்னமுமின்றி
வட்டமாக இருக்கின்றது

என் கண்கள் உறங்கவில்லை – நீ
பனித்துளி நனைத்த துணிகளால்
போர்த்தப்பட்டட மகிழ்ச்சியில் இருக்கின்றாய்
நீ அமைதியான வெள்ளி ஆழ்கடல்
உனது இரகசிய இசையே
என் காதில் படும்படி செய்
உனது பட்டுப் போர்வையை
எனக்குக் கடன் தருவாயா?

## Bright Morning

Over the pool are young willows,
under the willows a long shelter;
in the shelter are seated my son and I.
On the pool are reflected sun and clouds

Cockcrow, bird-call, parrot-screech
run on like a crystal stream;
butterflies flutter hither and thither,
the mud swallow darts hither and thither.

Dead leaves lurch as they fall,
float down into the pool;
green leaves swing in the air,
give off a silvery gleam above us.

A white bird
dances into the centre of the pool:
ah,a whole lagoon of splintered jade!
Unending rushbeds beyond.

# மகிழ்ச்சியான காலைப்பொழுது

குளக்கரையைச் சுற்றிலும்
இளம் வில்வ மரங்கள்
வில்வ மரங்களின் கீழே
நீண்ட புகழிடங்கள்
அப்புகழிடத்தில்
நானும் எனது மகனும் அமர்ந்தோம்
குளத்து நீரில் சூரியனும் மேகக்கூட்டங்களும்
மிதந்துகொண்டிருந்தன.

காக்கையின் கரைச்சல்
பறவைக் கூச்சல்
கிளியின் பேச்சு
பளிங்குக் கல் நீரோடை போன்ற ஓசை
வண்ணத்துப் பூச்சிகள்
இங்கும் அங்கும் ஓடுகின்றன
தூக்கணாங்குருவிகள் இங்குமங்கும்
பாடித்திரிகின்றன.

பழுத்த இலைகள்
தடுமாறிக் குளத்தில் விழுகின்றன
இளம் இலைகள்
காற்றில் ஊஞ்சலாடுகின்றன
வெள்ளிநிற ஒளி எங்கள் மீது
படுகிறது.

ஒரு வெள்ளைப் பறவை
குளத்தின் நடுவே நடனமாடுகிறது
ஆகா. . .!
குளத்தின் அடிப்பகுதி முழுவதும்
மரகதப் படுக்கையால் நிரம்பியுள்ளது.

# On the Shore

## I

The breeze on the shore
already blows cool and mild;
the distant merging of sea and sky
is but a red trace of sunset.
The sea has emerald depths,
its deep silence cuts off all tumult from me,
In the green heathland
I move with slow footsteps:
alone the disturbed frogs scurry off.
Here and there are fishermen's cottages,
cool beads of light spring out from them.
A dazzling moon
shines down from the lonely depths of the sky
Seated on a broken hulk on the shore
I play a small harmonica:
a plaintive melody
seems to fill the pure vault of the sky.
Body and soul are as though fused into one.

July 26, 1920

# கடற்கரையில்

## 1

சில்லென்ற இதமான
தென்றல் வீசுகின்றது
கடலும் வானமும் – தூரத்தில்
இணைகின்றன ஒன்றாக
அந்தி வானத்தில்
இளஞ்சிவப்புச் சுவடு
தென்படுகிறது.
பசுமை போர்த்திய
ஆழ்கடல் அமைதி
ஆரவாரங்களில் இருந்து – என்னை
தனிமைப் படுத்துகின்றது.
பசுமை போர்த்திய புல்வெளியில்
மெதுவாக நடந்து கொண்டிருக்கின்றேன் – நான்
துள்ளிக்குதித்தோடுகின்றன – தவளைகள்
இங்கும் அங்குமாக மீனவர் குடிசைகள்
அக்குடிசைகளிலிருந்து ஊடுருவிக்கொண்டிருக்கின்றன – வெளிச்சம்
வானத்திலிருந்து கீழ்நோக்கி ஒளிருகின்றது – வெண்ணிலவு
உடைந்த படகின்மீதமர்ந்து கடற்கரையில்
ஆர்மோனியம் வாசிக்கின்றேன்
சோகமான மெல்லிசை
விண்வெளி முழுவதும்
பரவுவதாகத் தெரிகிறது.
உடலும் உள்ளமும்
ஒன்றாவதுபோல உள்ளது.

ஜூலை 26, 1920

## II

The sky is now growing dusky,
I remain a solitary figure,
I sit in the fishing-boat on the shore,
gazing upon the white radiance of the moon,
the unfathomable depths of the blue abyss above,
the unfathomable depths of the sea of the sky.
The clamorous waves in the bay
toss and churn savagely behind me.
Poseidon!
Could you not give a thrust to this boat for me,
and launch me on the sea of the sky

July 27, 1920

## III

The lead-grey roofs of the fishermen's cottages
gleam darkly with a circle of red flame :
now crimson . . . now madder
now orange . . . now gold
it is as ever the white radiance of the moon,
"On the seashore of endless worlds children meet .

## 2

கருமையாகக் காட்சியளிக்கின்றது – வானம்
மீண்டும் தனிமையில்
படகின்மீது அமர்ந்தேன் – நான்
நிலவின் வெண்கதிர்களை
உற்று நோக்கியவாறு
எட்டா உயரத்தில்
நீலவானம்
ஆர்ப்பரிக்கும் கடலலைகள்
கட்டுக்கடங்காமல் என் பின்னே
சுழன்றுகொண்டிருக்கின்றன.

ஓ...போசிடான்...!
இந்த நீல நிறக் கடலில் – நான்
பயணம் செய்ய – எனக்காக
இப் படகைத்
தள்ளிவிட முடியுமா?

ஜூலை 27,1920

## 3

மீனவர் குடிசைகளின்
சாம்பல் நிறக் கூரைகள்
வட்ட வடிவச்
சிவப்பு வெளிச்சத்துடன்
ஒளிர்கின்றன
இப்போது நீலம். . .
இப்போது இளஞ்சிவப்பு
இப்போது தங்க நிறம்
எப்போதும்போல
வெண்ணிலவின் ஒளிக்கீற்றுகள்
வெண்மையாக உள்ளன
கடற்கரையின்
எல்லையற்ற உலகத்தில்
குழந்தைகள் சந்தித்துக் கொள்கின்றனர்

The infinite sky is motionless overhead and the
restless water is boisterous.
On the seashore of endless worlds the children
meet with shouts and dances .
Again I sit on the broken hulk on the shore.
My little Ah-ho!
joins with a troop of children;
they play together on the sands .
Reciting this poem of Tagore
I go and play with them.
Ah! If only I could become a pure child!

July 29, 1920

எல்லையற்ற வானம் – தலைக்குமேலே
அமைதியாக இருக்கின்றது
அமைதியற்ற கடல்நீர்
ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கின்றது
கடற்கரையின்
எல்லையற்ற உலகத்தில்
குழந்தைகள் குதூகலத்துடன்
சந்தித்துக் கொள்கின்றன
மீண்டும் உடைந்த
படகின்மீது அமர்ந்தேன்
என் அருமை ஆ–கு!
குழந்தைகளுடன் சேர்ந்து
மணலில் விளையாடுகின்றான்
தாகூரின் கவிதை வரிகளை
வாசித்துக்கொண்டு
நான் அக்குழந்தைகளுடன்
சேர்ந்து விளையாடுகின்றேன்
ஆகா!
உண்மையாகவே நான்
இப்போது குழந்தையாக
இருந்தால்!

ஜூலை 29,1920
குறிப்பு : போசிடான் கிரேக்கக் கடல் தெய்வம்

## Stirrings of Morning

Morning, pale as moonlight,
penetrates the serried depths of the wood;
scattered shadows interlace confusedly on the silvery sand.

Clear the sea beyond the pines,
far,very far,shapes of islands loom hazily,
clinging still, one might think, to last night's dream.

Holding my boy by the hand, slowly I walk,
strings of my ears stir to the symphony of cock-crow, bird-call;
strings of my heart gently give off a sympathetic note.

## விடியற்காலை

வெண்ணிற நிலவொளிபோலக்
காட்சியளிக்கின்றது – விடியற்காலை
அடர்ந்த காடுகளில்
ஊடுருவிச் செல்கிறது.
மரங்களின் நிழல்கள்
ஒன்றொடொன்று கலந்து படர்கின்றன
வெள்ளிநிற மணலில்

பைன்மரங்களைத் தாண்டிக்
கடல் தென்படுகின்றது
தூரத்தில் நெடுந்தூரத்தில்
தீவுகள் மங்கலாகத் தென்படுகின்றன
நேற்று இரவு
கனவில் வந்த – காட்சியை
நினைத்துப் பார்க்கவேண்டும்.

என் மகனின் கையைப் பிடித்தவாறு
மெதுவாக நடக்கின்றேன் – என் காதுகள்
காகத்தின் கரையல், பறவைகளின் கூச்சல்
இசையைக் கேட்டு இரசிக்கின்றன – என்
இதயம் மெதுவாக
இரக்கம் கொள்கிறது.

## Stirrings of Spring

Seated alone by the north window I look all round.
In the womb of nature spring is stirring.

Far away the sea gleams with a faint iridescence ;
now it is purple, now deep blue, now a tender green.

Light and shade play on the yellow plain
as if swept by a searchlight.

The depths of the sky are a jade blue flecked
with scudding clouds,
white clouds whose chyle-tinted edges almost
dazzle the eye .

Down below I see a white cock with a soft
crimson comb.
Its long drawn-out call has now a note of tiredness.

# வசந்த காலத்தின் தொடக்கம்

வடக்குச் சாளரத்தினருகில் அமர்ந்தவாறு
சுற்றுமுற்றும் பார்க்கின்றேன்
இயற்கையின் கருவிலிருந்து
முகிழ்த்துக் கொண்டிருக்கின்றது
வசந்த காலம்.

தொலை தூரத்தில்
வானவில் வண்ணத்தில்
காட்சியளிக்கின்றது – கடல்
ஊதா, நீலம், இளம்பச்சை என
வெளிச்சமும் நிழலும்
மஞ்சள் நிறவெளியில்
விளையாடுகின்றன
ஸ்டார்ச் லைட்டால்
தேடுவதைப்போல.

மேகத்தால் போர்த்தப்பட்ட
வானம் மரகதப் பச்சை
நிறத்தில் காட்சியளிக்கின்றது
மேகத்தின் வெண்மைநிற
முகப்புகள் கண்களைக் கூசச் செய்கின்றன.

ஒரு சிவப்பு நிறக் கொண்டை
வெள்ளைச் சேவலைக்
கீழே காண்கின்றேன்
அதனிடம் நீண்ட நேரக் கூவலின்
அயற்சி தென்படுகின்றது.

Some dapped hens are seated in the nearby
sand.
These young ladies have an air of languid indo
lence.
The sea breeze is just enough to ruffle the
cock's tail.
It has already pressed the gentlest of stolen
kisses on my cheeks and away it steals.

From the lonely waste land comes intermittent
birdsong
and the white cloude have now sped away.

Suddenly a white sail comes sail cornes into
view on the sea
and in a moment it, too, has sped away,

February 26

பொன்னிறக் கோழிகள்
மணலில் படுத்துள்ளன.
இவ் இளம் மங்கையர்கள்
களைப்புற்றுக் காணப்படுகின்றனர்
சேவலின் வாலைக் குலையச் செய்யக்
கடலின் தென்றல்
போதுமானதாக உள்ளது.

இது ஏற்கெனவே களவாடப்பட்ட முத்தத்தை
என் கண்ணத்தில் பதியச் செய்துவிட்டது.

தரிசு நிலத்திலிருந்து
பறவைகளின் பாடல்கள் ஒலிக்கின்றன
வெண்மேகங்கள் மறைந்துவிட்டன

ஒரு வெள்ளைநிறக் கப்பல்
கடலில் தென்படுகின்றது
ஒரு நொடியில்
இதுவும் மறைந்துவிடுகின்றது.

பிப்ரவரி 26

# Wedding at Sundown

The setting sun, veiled in rose-tinted gauze,
is round as a full moon, silent and pensive

The sea, too, that loves her, affects an outward
calm,
but the pale green of his silks cannot hide the
tumult in his heart.

Some delightful young girls, chattering and laughing,
prepare the joyful feast on the dry heathland

At last the bride , her full cheeks flushed with crimson,
is take into her sweetheart's embrace.

February 28

# சூரிய அஸ்தமானத்தில் நடந்த திருமணம்

*அந்திவானச் சூரியன்*
*இளஞ்சிவப்புத் திரையால்*
*முகத்தை மறைத்துப்*
*பௌர்ணமி நிலவாக*
*அமைதியாகக் காட்சியளிக்கின்றது.*

*வெளிர்பச்சை நிறப்*
*பட்டாடையால் சமுத்திரம் – தன்*
*இதய உணர்வுகளை*
*மறைக்க முடியவில்லை – அவள்*
*அமைதியால் ஈர்க்கப்பட்டுக்*
*காதல் வயப்பட்டான்.*

*இளம் பெண்கள்*
*ஆடிப் பாடி மகிழ்ந்து*
*அறுசுவை உணவு*
*சமைக்கின்றனர்.*

*மணப்பெண்ணின்*
*கன்னம் சிவந்து – இறுதியாக*
*அவளுடைய இனியவனின்*
*இதய அரவணைப்பில்*
*மூழ்கிவிட்டாள்.*

*பிப்ரவரி 28*

# Sunrise Seen from a Boat

Leaden circle of sky,
    indigo ocean
an empty expmse meets the eye:
    only aimless movement,lonely wastes.
Black smoke bellying up
    like an evil demon.

The clouds are suffused with gold,
    there is a claw scratch in the sky.
See that black sea-bird,
    whither is it winging its way?

My heart might be
    a model for intoxication;
I stand at the rail
    and spit bile.

Sun!
    Rounded crystalline ear-ring
at the meeting of sky and sea
    you swing up and down over the black cloud.
It's not easy to get a glimpse of you
    Sing for me a triumphal ode.
All things considered, I've won my victory over the
sea today!

April 3

# படகிலிருந்து பார்த்த சூரிய உதயம்

*அரைவட்ட வானம்*
*நீலக் கடல்*
*கண்கள் சந்திக்கும்*
*பரந்து விரிந்த வெளி*
*நோக்கமற்ற அசைவுகள்*
*தனிமை விரயங்கள்*
*கரும்புகைகள் மேல்நோக்கி*
*சாத்தான்போல மேலே செல்கின்றன.*

*தங்கத்தால் பூசப்பட்ட மேகக்கூட்டங்கள்*
*கரிய நிறக் கடல்பறவை*
*தன் பாதையில்*
*பயணித்துக் கொண்டிருக்கின்றது!*

*எனது இதயம்*
*நஞ்சிற்கு உதாரணம்*
*நான் இரயிலுக்கு சாய்ந்தபடி*
*உமிழ்நீரை துப்புகின்றேன்.*

*சூரியனே...!*
*வானத்தையும் கடலையும் சந்திக்கும்போது*
*காது வளையம்போல வட்டமாக இருக்கின்றாய்'*
*கருமேகக் கூட்டங்களில் மேலும் கீழுமாக மிதக்கின்றாய்*
*உனது தரிசனம் கிடைப்து எளிதன்று*
*எனக்காக ஒரு புகழ்மாலையைப் பாடு*
*இன்று கடலின்மேல் எனது*
*வெற்றிக்கொடியை நாட்டியுள்ளேன்*
*அணைத்துலகமும் மெச்சும்படி*

*ஏப்ரல் 3*

# Estuary of the Whamoa

Peaceful village,
land of my fathers,
so green those grassy shores,
so straw-pale the flow of the water.

I lean on the rail and look into the distance:
level like an ocean is the great country,
but for a few heaving willows
not a hill or cliff hindem the view.

The little craft ride up and down,
the men might be in a dream.
Peaceful village,
land of my fathers.

April 3

# கிராமத்து நதி

அமைதியான கிராமம்!
எனது தாய்நாடு
பசுமைப்புல்படர்ந்த நதிக்கரையில்
சலனமற்று ஓடிக்கொண்டிருக்கும் நீர்!

புகைவண்டிக்குச் சாய்ந்தவாறு நெடுந்தொலைவு பார்க்கின்றேன்
கடல்போன்று பரந்து விரிந்த மிகப்பெரிய நாடு
வில்வமரங்கள் தென்படுகின்றன!
மலையோ குன்றுகளோ தென்படவில்லை!

பறக்கின்றன மேலும்கீழுமாக – போர் விமானங்கள்
இருக்க வேண்டும் மக்கள் – கனவில்!
அமைதியான கிராமம்
எனது தாய் பூமி!

ஏப்ரல் 3

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

தரமணி, சென்னை - 600 113.

| | அண்மை வெளியீடுகள் | ரூ. பை. |
|---|---|---|
| 1. | சிலப்பதிகார இலக்கியக் கட்டமைப்பு | 160.00 |
| 2. | பழந்தமிழரின் பழக்க வழக்கங்கள் | 55.00 |
| 3. | பேரறிஞர் அண்ணாவின் சமூகப் பொருளாதாரச் சிந்தனைகள் | 75.00 |
| 4. | தமிழ்ச் செவ்வியல் நூல்களில் அறம், அறிவியல், சமூகம் | 70.00 |
| 5. | கிறித்தவக் காப்பியங்கள் | 225.00 |
| 6. | தமிழ் நாளிதழ்களின் மொழிநடை | 70.00 |
| 7. | சுயமரியாதை இயக்க வீராங்கனைகள் அன்றும் இன்றும் | 50.00 |
| 8. | குலோத்துங்கனின் கவிதை வளம் | 60.00 |
| 9. | தமிழ்த்தூது (கட்டுரைக் கொத்து) | 40.00 |
| 10. | தனிநாயக அடிகளாரின் ஆய்வுகள் | 50.00 |
| 11. | தனிநாயக அடிகளார் | 120.00 |
| 12. | வளர்ச்சிப் பாதையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் | 200.00 |
| 13. | சங்கப் பெண்பாற் புலவர்களின் மொழிநடை | 70.00 |
| 14. | ஆதிசைவம் | 70.00 |
| 15. | பெ.நா. அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள் தொகுதி - 3 | 235.00 |

வெ.எண் : 777

**சீனக்கவிஞர் குமோரோவின் தேவதைகள் (கவிதைத் தொகுப்பு)**

**விலை : ₹ 70.00**

ISBN : 978-81-925359-5-1

9 788192 535951